Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 07 திங்கட்கிழமை (20.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 202

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628

Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,

பஸ்ரியன் சந்தி,

யாழ்ப்பாணம்.

# நாடாளுமன்றம் கலைப்பு தேர்தல் முறையை மாற்றிய பின்னரே



## ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

தற்போதுள்ள தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்திய பின்னரும், 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னருமே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களுடனான சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத் தகவலை எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் தினேஸ் குணவர்தன ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கட்சித் தலைவர்களுடன் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

அர்ஜுன் மகேந்திரனுக்கு

## மோசடிகளுடன் நேரடித் தொடர்பில்லை

திறைசேரி பிணை முறிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் நிதியமைச்சின் செயலாளரான அர்ஜுன் மகேந்திரனுக்கு நேரடியான தொடர்புகள் இல்லை என மோசடி தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த பொருளாதார நிபுணரான அர்ஜுன் மகேந்திரன், நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டார்.

நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளராக பதவி வகித்த கலாநிதி பி.பீ ஜயசுந்தர அப்பதவிகளிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டார்.

அர்ஜுன் மகேந்திரன் சட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## 19 ஆவது திருத்தச் சட்ட விவாதம் நாளை நடாத்த இணக்கம்

அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் மீதான விவாதத்தை நாளை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விவாதத்தை நாளை செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைக்கும் முடிவு எடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகளின் பொது அமைப்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன

19 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகளில் பதுக்கிய சொத்துக்கள் குறித்து ஆராய வந்தது உலக வங்கி குழு

கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களை மீள பெற்றுக்கொள்வது தொடர்பில் அதிகாரிகளுடனும், பொலிஸாருடனும் கலந்துரையாடுவதற்காக உலக வங்கியின் அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெறுவதற்காக உலக வங்கி ஒரு பிரிவை ஏற்படுத்தியுள்ளது, அதன் அதிகாரிகளே இவ்வாறு இலங்கை வந்துள்ளனர்.

வெளிநாடுகளில் பதுக்கி

19 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு வங்கிகளில் இரகசியக் கணக்கு உள்ளதா?

### குற்றச்சாட்டை மறுக்கும் மகிந்த

(கொழும்பு)

வெளிநாட்டு வங்கிகளில் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் இரகசிய மற்றும் சட்டவிரோத வங்கிக் கணக்குகள் இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்றாக மறுத்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிகள் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் சேறு பூசும் வகையில், வெளிநாட்டு வங்கிகளில் இரகசிய வங்கிக் கணக்குகள் இருப்பதாகவும், இவற்றில் பல பில்லியன் கணக்கான பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் பொய்ப் பிரசாரம் செய்கின்றார்கள்.

இந்தப் பொய்யான வதந்திகளை ஊடகங்களும் புதுப்பித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை எனது அரசியல் எதிரிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் சித்தாந்தம் மீது பற்றுறுதி கொண்டவர்களல்ல



### கூறுகிறார் சுமந்திரன்

விடுதலைப் புலிகள் மீதோ அவர்களின் சித்தாந்தம் மீதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பற்றுறுதி கொண்டதல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு சுமந்திரன் அளித்துள்ள செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக, சீன செய்தி நிறுவனமான சின்ஹுவா செய்தி வெளியிட்டுள்ளது.

நாம் விடுதலைப் புலிகள் மீதோ, அவர்களின் சித்தாந்தம் மீதோ பற்றுறுதி கொண்டவர்கள் அல்ல.

நாம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நிற்கிறோம். நாம் தீவிரவாதத்தை ஆதரிக் கவோ, ஊக்குவிக்கவோ இல்லை என்பது அனைவருக்கும் தெரியும்.

விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைய முனைவதாகக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.ம.சு. முன்னணியிலுள்ள கட்சிகளை நீக்கவில்லை

### செயலாளர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில கூட்டணிக் கட்சிகள் மற்றும் உறுப்பினர் களை முன்னணியில் இருந்து நீக்க தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளை முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த மறுத்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சுசில் பிரேமஜயந்த, வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை எனக் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, கட்சிகளையோ, உறுப்பினர்களையோ அல்லது மக்கள் பிரதிநிதிகளையோ கூட்டணியில் இருந்து நீக்க வேண்டும் என்று எந்த தீர் மானங்களையும் எடுக்கவில்லை.

அத்துடன் அப்படியான தீர்மானம் பற்றியும் எந்த கலந் துரையாடல்களையும் நடத்த வில்லை எனவும் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

## புகலிடதாரிகள் சென்ற படகு மூழ்கி விபத்து



### 700 பேர் உயிரிழப்பு?

மத்தியதரைக் கடற்பகுதியில் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 700 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகில் 500 தொடக்கம் 700 பேர் வரை பயணித்ததாகவும் இதில் உயிரிழந்த 28 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இத்தாலிய கரையோர பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.


தெற்கு இத்தாலியின் லம்பேடுஸா தீவிற்கு அருகில் நேற்று நள்ளிரவு வேளையில் இவர்கள் பயணித்துக்கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இறந்தவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் இதற்காக 20 விசைப்படகுகள் மற்றும் மூன்று உலங்கு வானூர்திகள் உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்தாலிய கரையோர பாது

19 ஆம் பக்கம் பார்க்க

# தீர்வுக்கான சந்தர்ப்பங்களை தட்டிக் கழித்துவரும் கூட்டமைப்பு

## பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(வடமராட்சி)

சர்வதேச சமூகமும் உள்நாட்டு அரசும் தமக்கு சாதகமாக இருப்பதாகவும், இருக்கின்ற சூழ்நிலையில் அந்தச் சந்தர்ப்பங்களை தாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனக்கூறும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஐக்கிய இலங்கைக்குள்தான் அரசியல் தீர்வு என்றும் அத்தீர்வையும் அரசாங்கமே முன்வைக்க வேண்டும் எனத் தெரிவித்து, அச்சந்தர்ப்பங்களை தட்டிக் கழித்து வருகின்றார்கள் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கு முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 17ஆம் திகதி தாளையடி முன்பள்ளி மண்டபத்தில் விளையாட்டுக் கழகச் செயலாளர் ஜேசுதாஸ் லதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியில் முதன்முதலாக இக்கிராமத்திற்கே வடக்கின் வசந்தம் ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டது. அதனையும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். அதே போன்று தபாலகத்தையும் திறந்து வைத்தார்.

தாளையடி சென்.அன்ரனிஸ் முன்பள்ளிப் புனரமைப்புக்கு பெருந்தொகையான நிதி வழங்கியுள்ளார். உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீதி விளக்குகளில் எனக்கு ஒதுக்கப்பட்ட விளக்குகளை இக்கிராமத்திற்கும் மருதங்கேணி பிரதான வீதிக்குமே பொருத்தினோம். அவ்வாறு அக்கறையுடன் செயற்பட்டோம். தற்போது மத்தியிலும் மாகாணத்திலும் உள்ளூராட்சியிலும் அதிகாரத்தில் உள்ள கூட்டமைப்பினரிடம் இங்குள்ள மைதானம் தொடர்பாக பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டும் அவர்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அக்கறையின்றியே உள்ளார்கள். அதேபோன்றுதான் எமது இனத்தின் அரசியல் தீர்வு விடயத்திலும் கூட்டமைப்பினர் தட்டிக் கழித்து வருகின்றார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 2015 இல் தீர்வு நிச்சயம் எனவும் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் சம்பந்தன் கூறினார். தேர்தலின் பின் சந்திரிகா தலைமையிலான செயலணி தீர்வை வைக்கும் எனவும் கூறினார்கள். பின்னர் வருட இறுதிக்குள் தீர்வு என்கிறார்கள். அது எவ்வாறான தீர்வு என்பதை அவர்கள் கூறவில்லை.

தற்போது சர்வதேச சமூகமும் உள்நாட்டு அரசும் தமக்கு சாதகமாக இருப்பதாகவும், இருக்கின்ற சூழ்நிலையில் அந்தச் சந்தர்ப்பங்களை தாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என திருகோணமலை நகர மண்டபத்தில் கூறுகிறார். தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் தாமே என்று சொல்லிக் கொள்ளும் கூட்டமைப்பினர் மக்களின் பிரதான பிரச்சினையான அரசியல் தீர்வை வேறொருவர் முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அதனை ஏதாவது குறைபாடுகளைக் கூறி தட்டிக் கழிப்பதற்கான வழமையான சூழ்ச்சியாகவே உள்ளது. உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் தாமே என்றால் கூட்டமைப்பின் தலைமை தீர்வுத்திட்டத்தை தயாரித்து, சர்வதேச சமூகமும் உள்நாட்டு அரசும் தமக்கு சாதகமாக இருக்கின்ற சூழ்நிலையில் அந்தச் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### உல்லாச கடற்கரையாக அக்கரை மாற்றம்

(அச்சுவேலி)

யாழ். வலி. கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட வளலாய் அக்கரை கடற்கரையை உல்லாச கடற்கரையாக் மாற்றுவதற்கான முதற்கட்ட பணிகள் 1 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வளலாய் அக்கரை கடற்கரை பகுதி கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில், அப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறினர்.

கடற்கரையை அண்டிய பகுதிகளில் சவுக்குமரம் வளர்த்தல், ஓய்வுக் குடில்கள் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தல், மின்சார வசதிகள் ஏற்படுத்தல், இருக்கைகள் அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக முதற்கட்டமாக 1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து கட்டம் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

### சிரமத்தில் வியாபாரிகள்

நெல்லியடி புதிய பொதுச் சந்தையில் கட்டப்பட்ட மலசல கூடத்தில் பொதுமக்களும் வியாபாரிகளும் பாவிப்பதனை தவிர்த்து பழைய சந்தைப்பகுதியில் உள்ள ஓடையில் சிறுநீர் கழிக்கின்றனர்.

இதனால் அருகில் உள்ள வெற்றிலைக்கடை வியாபாரிகள், பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இத்தோடு மீன்சந்தைப் பகுதியும் துர்நாற்றம் வீசுகின்றது. இதுதொடர்பாக பலமுறை பிரதேச சபை மேற்பார்வையாளருக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (18)

### விவசாய சேவைகளை விஸ்தரிக்க கோரிக்கை

(நவாலி)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர், சண்டிலிப்பாய் பெரும்பாக அலுவலர், கிராம அலுவலர், விவசாயிகள் சம்மேளன தலைவர் (நவாலி), செயலாளர்கள் ஆகியோரிடம் நான்கு அம்சக் கோரிக்கை முன்வைத்து நவாலி விவசாயி வி.க.இராசதுரை விரிவான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

நவாலி விவசாயிகளின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கான வேண்டுகோள் எனும் தலைப்பில் விவசாயி வி.க.இராசதுரை எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவாலியில் உள்ள தூர்ந்து போயுள்ள குளங்கள், கேணிகள், வாய்க்கால்கள் முழுமையாக கணக்கெடுத்து மீள்புனரமைப்புச் செய்யவேண்டும்.

அமைச்சால் வழங்கப்பட்ட கம்பிகள், பயன்பாடு இன்றி உள்ளன. எனவே கால்நடைகளின் தொல்லைகளில் இருந்து பயிர் நிலங்களைப் பாதுகாக்க தூண் இட்டு கம்பியிடவேண்டும்.

ஜே/136 கிராம அலுவலர் பிரிவில் வாய்க்கால் பாதையை முழுமையான 9 அடி பாதையாக புனரமைத்துத் தரவேண்டும்.


கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த விவசாய சம்மேளனங்கள் பிரத்தியேகமாக செயற்படவேண்டும்.

போன்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே கடிதம் எழுதப்பட்டுள்ளது. இதேவேளை மேற்படி விடயம் தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் விவசாயி வி.க. இராசதுரை அவசர நடவடிக்கை எடுத்துள்ளார். (92)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# கல்வயல் கிராம்புவில் கிராமத்தில் விவசாய நிலங்களை சுற்றி அமைக்கப்பட்ட வேலி உடைப்பு



(சாவகச்சேரி)

கல்வயல் கிராம்புவில் கிராமத்தின் விவசாய நிலத்தை சுற்றி அமைக்கப்பட்ட சுற்றுவேலி விசமிகளால் இரவோடு இரவாக உடைக்கப்பட்டுள்ளது.

விவசாய பயிர்களை கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக விவசாயிகளால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியே விசமிகளால் உடைத்தெறியப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகமான நிலையில் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை தொடர்ந்து எதிர்நோக்கிவந்தனர்.


இக்கட்டாக்காலிகளின் தொல்லை தொடர்பில் கல்வயல் கமக்காரர் அமைப்பினரால் இப்பிரதேச கிராமசேவகர், பிரதேச சபையினரிடம் பலதடவைகள் முறையிடப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இக்கிராம விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

உரியவர்கள் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் கல்வயல் கிராம்புவில் விவசாயிகளின் கூட்டு முயற்சியினால் அவர்களின் சொந்தசெலவில் கடந்த வெள்ளிக்கிழமை சிமெந்து தூண்கள் நடப்பட்டு கட்டாக்காலிகள் உட்புகாத வகையில் முட்கம்பிகளால் சுற்றி அடைக்கப்பட்டது.

சுற்றுவேலி அமைக்கப்பட்ட அன்றைய தினம் இரவே திட்டமிட்டு விசமிகளால் தூண் வேலிகள் உடைத்தெறியப்பட்டுள்ளது. (11)

# வேறுபட்ட கடற்றொழில் நடவடிக்கையால் முரண்பாடுகள் அதிகமாக இடம்பெறுகின்றன

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(பச்சிலைப்பள்ளி)

கடற்றொழில் நடவடிக்கைகளின் போது நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் நடைமுறையில் ஒரேவிதமான கடற்றொழில் சட்டதிட்டங்களும் விதிமுறைகளும் இருக்க வேண்டுமே, தவிர பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்ட நடைமுறைகள் இருக்க முடியாது. அவ்வாறு இருப்பின் அது சில பகுதி கடற்றொழிலாளர்களுக்கு நன்மையாகவும், சிலருக்கு பாதகமாகவும் அமையும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்ட கடற்றொழில் நடவடிக்கைகளால் கடற்றொழிலாளர்கள் மத்தியில் பாதிப்புக்களும், பிரச்சினைகளும் ஏற்பட்டு வருகின்றன. இதனால், எமது உள்ளூர் மீனவர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகள் தீர்க்கபபட வேண்டுமாக இருந்தால் மாவட்டத்திற்கு மாவட்டம் பாகுபாடு காட்டாமல் எல்லோரையும் ஒரே நிலையில் பார்க்க வேண்டும்.

இந்திய மற்றும் தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் எமது கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், கடல் வளமும் அழிந்து செல்கிறது.

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலில் சாதாரணமாக ஈடுபட்டுவருகின்றனர். இது அனைத்து கடற்றொழிலாளர்களையுமே பாதிக்கிறது

எனவே, இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் சந்தித்துப் பேசி இதற்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தில்லைக்குமார் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், சமாச பொது முகாமையாளர் மற்றும் சமாசத்திற்குட்பட்ட கடற்றொழில் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோா கலந்துகொண்டனர்.

# சட்டவிரோத மண் அகழ்வு சந்தேக நபர் கைது

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ்பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மேற்படி சந்தேக நபர் அதே பகுதியினைச் சேர்ந்தவர் எனவும் மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட சிறிய வடி ரக வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். கடந்த காலங்களில் உழவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங்களை பயன்படுத்தி மணல் கொள்ளையில் ஈடுபட்டு வந்த மணல் கொள்ளையர்கள், தற்போது இலகுவான முறையில் அதிகளவு மணல் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபடும் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சந்தேக நபரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவானின் வாசஸ் தலத்தில் ஆஜர்படுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார். (11)

# கைதடியூர் கவிஞர் புவிராஜின் "ஓலை" கவிதை நூல் வெளியீடு



(கைதடி)

நோர்வேயில் வசிக்கும் கைதடியூர் கவிஞர் வே.புவிராஜ்ஜின் 'ஒல்ல' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் உத்தியோகத்தர் சி.நிசாகரன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றிய தலைவர் அ.கயுந்தனும், ஆசியுரையை ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும், வாழ்த்துரைகளை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரனும் நிகழ்த்தியுள்ளனர்.

வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் லயன்.ப.செல்லத்துரை நிகழ்த்தினார். நூலின் முதல் பிரதியை மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன் சார்பாக அவரது மனைவி திருமதி. நிர்மலா சிறிதரன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும், நூல் மதிப்பீட்டுரையை கவிஞர் கை.சரவணனும் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் வே.புவிராஜ் நிகழ்த்தினார். நூலாசிரியர் தனக்கு கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவித்தார். (90.51)

# குமாரபுரம் கிராமத்தில் ஒருவர் தற்கொலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தனக்குத் தானே சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த சின்னப்பு குகன் எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தற்கொலை செய்துகொண்டவரின் மனைவி கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் மரணமானதையடுத்து உளரீதியாகப் பாதிக்கப்பட்ட குறித்த நபர் இதற்கு முன்னரும் இரு தடவைகள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் என உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மனைவியின் மரணத்தையடுத்து உளரீதியாகப் பாதிப்படைந்துள்ள இவர் வவுனியாவிலுள்ள உறவினர் வீட்டில் இருந்துகொண்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

இந்நிலையில் புதுவருடத்தை முன்னிட்டு முல்லைத்தீவு குமாரபுரத்திலுள்ள தனது அக்காவின் வீட்டிற்கு சனிக்கிழமை வந்த இவர், குமாரபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் அக்காவின் வீட்டு யன்னலில் துணியொன்றினால் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார் எனத தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து உறவினர்கள் அவரை உடனடியாக அருகிலுள்ள மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவம் பற்றி முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விஜயம் செய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (165)

# பல்துறைகளில் சேவையாற்றிய பிரமுகர்கள் கௌரவிப்பு



(வவுனியா)

அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வடமாகாணத்தில் பல்துறைகளில் மக்களுக்கு சேவையாற்றிய மற்றும் ஆற்றிவரும் பிரமுகர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தினால் தலைவர் சாமஸ்ரீ தேசமான்ய எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவருமான அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், வீடமைப்பு, சமுர்த்தி பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷாஹிப் மொஹிதீன், அமைச்சரின் இணைப்பு செயலாளர் முத்து முஹம்மத், வவுனியா நகர சபை முன்னாள் உறுப்பினர் அப்துல் பாரி, முசலி பிரதேச சபை தலைவர் தேசமான்ய யஹ்யான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்துறைகளில் மக்களுக்கு சேவை புரிந்த மற்றும் புரிந்துவருகின்ற பிரமுகர்கள் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (165)

# வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், 30 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 01 ஆம் திகதி (மே மாதம்) வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 02 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 04 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது.

05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தியும், 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் மடையும் இடம்பெறவுள்ளது. மேற்படி உற்சவம் ஆலய பரம்பரை தாப்ரிப்பாளரும், பிரதம குருவுமான இ.நித்தியகஜேந்திரன் ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வெற்றி நமது தவறுகளை மூடி மறைத்துவிடும்.
- ஆன்றோர் மொழி.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கதிரைச் சொகுசு அரசியல்!

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்ள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குரிய தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

முதலில், இந்த நாட்டில் உள்ள ஏனைய சமூகங்களான சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழ தமிழர்களாகிய நாம் அதற்குரிய மனத்தயாரிப்புடன் இருக்கிறோமா?

ஏனென்றால் சிங்கள முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழும் எண்ணத்தைக் கொண்டிருந்தால்தான் அவர்களுடன் என்ன பேசுவது என்பதைப் புரிந்து கொள்வோம். அவர்களுடன்தான் பேச வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வோம்.

மாறாக, அவர்கள் வேறு நாங்கள் வேறு என்ற முப்பதாண்டுகளுக்கு முந்திய மனநிலையுடன் எந்தப் பேச்சும் சரிவரப் போவதில்லை.

அதனால்தான் எமது மக்களின் சார்பாகப் பேச்சு நடத்துவார்கள், தீர்வொன்றைக் காண்பார்கள் என்று தமிழ்மக்கள் தெரிவுசெய்து அனுப்பியவர்கள், "பேச்சு சரிவராது, அரசு தீர்வைத் தராது, வெளியார் வந்து மிரட்டாமல் எங்கள் பேச்சால் எந்தப் பயனும் விளையாது..." என்பதையேதான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கா போய்ப் பேசி அரசைப் பணிய வைக்கிறோம் என்று கிளம்பிப் போய் வெறுங்கையோடு வருகிறார்கள். பிறகு, அமெரிக்காவிலிருந்து இங்கு வந்தும். சொல்கிறார்கள்.

இந்தியா பன்னிப் பன்னி சொல்லிக் கொண்டிருப்பதுவும், வந்து வந்து சொல்லிப் போவதுவும் எதுவும் காதில் விழாதது போலவே பம்மிவிட்டு, இந்தியா வரும், அமெரிக்கா வரும் இன்னுங் கொஞ்சக்காலம் பல்லைக் கடித்துக் கொண்டு இருங்கள் என்கிறார்கள்.

இதற்கிடையில், நிலம் போகிறது, கலாசாரம் அழிகிறது, ஆமி நம் காணிகளைக் களவாடப் போகிறது, அபிவிருத்தி நடக்கவில்லை என்றும் அவ்வப்போது சில பிலாக்கணங்களை எடுத்து வீசிவிட்டு, தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிப்பதில் மும்முரமாகி விடுகிறார்கள்.

மாகாணசபை என்ன செய்கிறது? குடிநீர்ப் பிரச்சினைக்கு என்ன தீர்வு? ஒட்டுமொத்த இனப்பிரச்சினைத் தீர்வுக்காக என்ன வெட்டிமுறிக்கிறீர்கள்? போன்ற கேள்விகளைக் கேட்டால், பதிலாக வழக்கமான வெற்று எச்சரிக்கை முழக்கங்களுடன் மக்களை உணர்ச்சியூட்டும் நாடக வசனங்களே வருகிறது.

இந்த "அகிம்சைவாதிகளுக்கு"ப் பேச்சும் சரிவராது; மக்களிடம் இறங்கிப்போதல், ஒன்றுதிரட்டுதல், ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடுத்துதல்.... எதுவும் செய்வதற்கு இதுவரை கண்டுவரும் கதிரைச் சொகுசு விடாது.

வரும் அரசாங்கங்களை எல்லாம் வெறும் பிலாக்கணத்தால் வீழ்த்தும் முயற்சியிலேயே, அந்தப் போலி நம்பிக்கையிலேயே மக்களை தங்கள் கஷ்டங்களையெல்லாம் சகித்தபடி தேர்தலுக்குத் தேர்தல் வாக்குப் போடவைத்துக் கொண்டிருக்கலாம் என்பதே ஒரே ஏமாற்றாக இன்னும் தொடர்கிறது?

இதற்கு மேலும் மௌனம் சாதித்து நம்மை இன்னுமின்னும் கீழ் படிகளுக்குக் கொண்டுசெல்ல படித்தவர்கள், விவரமறிந்தவர்கள் துணைபோய்விடக் கூடாது. யதார்த்தம் என்ன என்பது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும், விவாதிக்கப்படவும் வேண்டும்.

இந்த நாட்டுக்குள் நாம் யார்யாருடன் சேர்ந்து வாழப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லோருடனுமான உரையாடல்கள் திறக்கப்பட வேண்டும்.

- ஆசிரியர்

# "தேசிய அரசு" என்ற கருப்பொருள் பொலிவிழந்து போகவாய்ப்பு

## தெற்கில் மாறுகிறது வியூகம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவது குறித்து நிபந்தனைகளை விதிக்க கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்றால் நிபந்தனை அடிப்படையிலேயே போட்டியிடப் போவதாக பங்காளிக்கட்சிகள் அறிவித்துள்ளன.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் திட்டத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டால் ஆதரவளிக்க முடியாது என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையிலான அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டுமென கோரியுள்ளன.

அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கமொன்றையே அமைக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் அதிகளவு ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டு, கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் பிரதமர் பதவியை வகிக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கட்சித் தலைவர்களிடம் கோரியுள்ளார்.

# ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் தொழில்வாய்ப்பு

## – தயாராகிறது திட்டம் –

ஓய்வுபெற்றவர்களுக்கு மீண்டும் தொழில் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஓய்வுபெற்றவர்களின் திறன்களுக்கு ஏற்ற வகையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளதாக, ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அரச சார்பற்ற துறைகளிலும், சுய தொழில் முயற்சிகளிலும் அவர்களை ஈடுபடுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்பொருட்டு 28 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன், ஓய்வுபெற்றவர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும், விற்பனை செய்வதற்காகவும் புதிதாக இணையத்தளமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எமக்கு மட்டுமே அந்தத் தகுதி

## சுமந்திரன் சொல்கிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணையாத ஒரே கட்சி எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மதித்து சரியான முறையில் சீர்தூக்கிப் பார்த்தால், எதிர்க்கட்சித் தலைமைப் பதவி எமக்கே வழங்கப்பட வேண்டும் என கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்கு கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளது. த.தே.கூட்டமைப்பில் 14 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஜனநாயக தேசிய முன்னணிக்கு 7 ஆசனங்களே உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசாங்கத்தில் இணைந்துள்ளன.

இந்த அடிப்படையில் பார்க்கும் போதும் எதிர்க் கட்சித் தலைவராக வருவதற்குரிய தகைமை எம்மிடமே உள்ளது என நேற்றைய சிங்கள வார இதழொன்றுக்கு அவர் மேலும் கூறியுள்ளார்.

## மூவாயிரம் பேருக்கு துப்பாக்கிகள் விநியோகம்

பயிற்சி இல்லாதவர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சு 3000 துப்பாக்கிகளை பல்வேறு தரப்பினர்களுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஆயுதங்கள் பயன்படுத்துவது தொடர்பிலான அடிப்படை பயிற்சி வழங்காமலேயே இவ்வாறு துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.வர்த்தகர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இவ்வாறு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பயிற்சி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிர்காலத்தில் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# V.I.Pக்கள் அறுவர் கைது செய்யப்படும் வாய்ப்பு

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக எமில்காந்தன் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பணம் வழங்கியது உட்பட பாரிய மோசடிகளுடன் தொடர்புடைய அறுவரைக கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் அதி முக்கியமான பதவிகளை வகித்த மூவர் உட்பட உயர் அதிகாரிகள் மூவரும் விரைவில் கைது செய்யப்பட உள்ளனர்.

எமில் காந்தன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு பணம வழங்கியமை, நடராஜா ரவிராஜ் கொலை, திவிநெகும மோசடி, அவன்கார்ட் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள், வருமானம் தொடர்பில் போலியான தகவல்களை வழங்கியமை, கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்படவுள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பிலான ஆரம்ப கட்ட விசாரணைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இலங்கை வந்தவுடன் விமான நிலையத்தில் வைத்து கைது செய்ய பொலிஸ் பிரிவினர் தயார நிலையிலுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

திவிநெகும மோசடிச் சம்பவம் தொடர்பிலேயே பசில் ராஜபக்ஷ கைது செய்யப்படவுள்ளார்.

# 20 ஆம் திருத்தம் மூடுமந்திரம்

## விபரம் அறிந்தபின்பே ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

அரசியலமைப்பில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான 20 ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து அரசாங்கம் இதுவரையில் தகவல்களை வெளியிடவில்லை. அது தொடர்பில் விபரங்கள் வெளியான பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளியிட முடியும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை வழங்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.







# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.5% மாகக் குறைவடையும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி அறிக்கைகள் சுட்டிக்காட்டு!

**இலங்கையில் கட்டுமானத்துறைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் புதிய வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டமையால் ஏற்பட்டிருக்கும் அதிகரித்த நுகர்வு என்பன காரணமாகவே இந்த நிலைமை ஏற்படுவதாக உலக வங்கியின் நிதியறிக்கை குறிப்பிட்டுள்ளது.**

## கோ.றுஷாங்கன்

**2015** மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7 சதவீதத்தைவிடக் குறைந்த நிலையை அடையும் என்று. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரண்டினதும் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைந்த நிலையிலேயே 2015-16 காலப்பகுதிகளில் இருக்கும் என்று ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டிருந்த அறிவிப்பை இந்த அறிக்கைகள் மேலும் உறுதிப்படுத்துவனவாக உள்ளன.

ஆண்டுக்கு இரண்டு தடவை வெளியிடப்படும் உலக வங்கியின் நிதியறிக்கையில், 2015ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் [illegible] என்ற அளவுக்கு வீழ்ச்சியடையும் என்று எதிர்வுகூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கட்டுமானத்துறைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் புதிய வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டமையால் ஏற்பட்டிருக்கும் அதிகரித்த நுகர்வு என்பன காரணமாகவே இந்த நிலைமை ஏற்படுவதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் முதலீட்டை முதன்மைப்படுத்திய பொருளாதார வகைமாதிரியை மாற்றி புதிய ஒன்றை உருவாக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சித்து வரும் நிலையில், இது அதற்கு ஒரு சவாலாக இருப்பதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2014ஆம் ஆண்டு முதல் காலாண்டில் 7.6 சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 7.8 சதவீதமாகவும், மூன்றாவது காலாண்டில் 7.7 சதவீதமாகவும் இருந்ததாகச் சுட்டிக்காட்டும் உலக வங்கி அறிக்கை, 2014ஆம் ஆண்டு இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி வீதம் 7.4 சதவீதமாக இருந்ததாகவும் குறிப்பிடுகிறது. இது, 2013இல் இருந்த 7.2 சதவீதம் என்ற நிலையைவிட உயர்வானது என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, உலக பொருளாதார நிலைமைகள் தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் பிந்திய அறிக்கை, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2015, 2016இல் 6.5 சதவீதமாக இருக்கும் என்று எதிர்வுகூறியுள்ளது.

2014ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி வீதம் 7.4 சதவீதமாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் இந்த அறிக்கை, இது சர்வதேச நாணய நிதியம் எதிர்வுகூறிய 7 சதவீதம் என்ற நிலையைவிட உயர்வானதாக இருந்தது என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறியிருந்த 7.5 சதவீதம் மற்றும் இலங்கை மத்திய வங்கி எதிர்வுகூறியிருந்த 7.8 சதவீதம் என்ற நிலைமைகளைவிடக் குறைவாக இருந்தது என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு, நல்லாட்சி, சர்வதேச உறவு, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு என்ற புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவையே என்றாலும், உறுதியான அரசாங்கம் இல்லாத காரணத்தினால், நீண்டகால பொருளாதார கொள்கைகள் இல்லாத நிலை காணப்படுவதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதனால், 2015 ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த காலத்தில் காணப்பட்ட நாட்டின் பொருளாதார ஈர்ப்பு நிலை படிப்படியாக வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.**

ஆகமொத்தம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய மூன்று சர்வதேச நிதி நிறுவனங்களும் 2015-2016இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7 சதவீதத்தைவிடக் குறைவாகவே இருக்கும் என்று எதிர்வுகூறியிருக்கின்றன.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் 2014ஆம் ஆண்டு 8 சதவீத பொருளாதார வளர்ச்சி நிலையை இலங்கை எட்டும் என்றும், தொடர்ந்து 2020ஆம் ஆண்டு வரை இந்த நிலை மாறாமல் நீடிக்கும் என்றும் மத்திய வங்கி எதிர்வுகூறியிருந்த நிலையில், இப்போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7 சதவீதம் என்ற நிலையைவிடத் தாழ்ந்து செல்லத் தொடங்கியிருப்பதாக இந்த சர்வதேச நிதி நிறுவனங்களின் அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் நிலவும். பொருளாதார உறுதிப்பாடற்ற தன்மை காரணமாக முதலீடுகள் பாதிக்கப்படுவதாலேயே அதன் பொருளாதார வளர்ச்சி வீதம் 7 சதவீதத்தைவிடக் குறைந்த நிலையை அடையக் காரணம் என்று ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்திருந்தது.


இதேவேளை, புதிய அரசாங்கத்தின் இந்த பொருளாதார உறுதிப்பாடற்ற இலங்கையின் பொருளாதாரத்திலும், வர்த்தக சூழலிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது, மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தி முதலீடுகளை ஈர்ப்பதற்கு உறுதியான பொருளாதார நிலைமை தோற்றுவிக்கப்படவேண்டும் எனவும், இதற்கு உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவது அவசியம் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

சட்டம் ஒழுங்கு, நல்லாட்சி, சர்வதேச உறவு, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு என்ற புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவையே என்றாலும், உறுதியான அரசாங்கம் இல்லாத காரணத்தினால், நீண்டகால பொருளாதார கொள்கைகள் இல்லாத நிலை காணப்படுவதாக வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதனால், 2015 ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த காலத்தில் காணப்பட்ட நாட்டின் பொருளாதார ஈர்ப்பு நிலை படிப்படியாக வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.









# காணாமற்போனோர் விவகாரம் இறுதி அறிக்கை பரம இரகசியம்

காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது என ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டால் மட்டுமே அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பார்வைக்காகவே இந்த அறிக்கை தயாரிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் படையினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இழைத்த தவறுகள் பற்றி குறிப்பிடப்




பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்த விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த விசாரணைக்குழு நிறுவப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# கெரி வருவது உறுதி



அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி, எதிர் வரும் மே மாதம் 2 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஒருவர் ஸ்ரீலங்காவிற்கு 1982 ஆம் ஆண்டு இந்த நிலையில் ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா எதிர்பார்ப்பதாக ஜோன் கெரி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அமெரிக்க இராஜாங்க செயலாளரின் விஜயம் இடம் பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


# பெயர் சூட்டவில்லை எனது கட்சிக்கு



தனது புதிய அரசியல் கட்சியின் பெயரை அடுத்த மாத ஆரம்பத்தில் கூட்டவுள்ள மாநாட்டில் தீர்மானித்து, பின்னர் மக்களுக்கு அது அறிவிக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிய முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஏனைய பொறுப்புக்கள் குறித்தும் அக்கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# எந்தப் பக்கமும் சாயமாட்டோம்



இலங்கை சீனா சார்பு நாடோ அல்லது இந்திய சார்பு நாடோ இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருவாயூரில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்திய மீனவர்கள் குறித்த அவரது சர்ச்சைக்குரிய கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய வேளை ரணில்விக்கிரமசிங்க இலங்கை அரசாங்கம் இலங்கையர்களின் நலனையே பிரதிநிதித்துவம் செய்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இன்னமும் சிறப்பான உறவுகள் அவசியம் என கருத்துத் தெரிவித்துள்ள அவர் இரு நாடுகளும் முன்னோக்கி நகரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கேரள கலாசாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு குருவாயூர் தேவஸ்தானம் விடுத்த வேண்டுகோளை ஆக்க பூர்வமாக பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ள ரணில்விக்கிரமசிங்க, இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சாதகமாக அமைந்தால் அந்த கோவிலுக்கு வருவதாக வேண்டியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# வருகிறார் பஷில் கைது செய்யப்பட வாய்ப்பு இல்லை



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ள நிலையில், அவரை பொலிஸார் கைது செய்யமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், தனது மனைவியுடன் அமெரிக்காவுக்குச் சென்ற பசில் ராஜபக்ஷ, திவிநெகும திணைக் களத்தில் இடம்பெற்றுள்ள 65000 மில்லியன் ரூபா மோசடி தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க நாடு திரும்பவுள்ளார்.

அமெரிக்காவின் மின்னெபொலிஸ் அனைத்துலக விமான நிலையத்தில் இருந்து அவர், சன் கன்றி உள்நாட்டு விமான சேவை மூலம் ஜோன் எவ்.கெனடி விமான நிலையத்தை சென்றடைவார். அங்கிருந்து, எமிரேட்ஸ் விமானம் மூலம், டுபாய்க்குப் பயணமாவார்.

இதற்காக அவருக்கு, எமிரேட்ஸ் விமானத்தில், கட்டணம் அதிகமுள்ள வர்த்தக பிரிவில் ஆசனம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த விமானத்தில் வர்த்தக வகுப்பில் 10 ஆசனங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றில் மூன்று ஆசனங்களே முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் பசில் ராஜபக்ஷவும் ஒருவராவார்.

டுபாயில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் முதல் வகுப்பில், பயணம் மேற்கொண்டு, நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.35 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைவார்.

பசில் ராஜபக்ஷ தனியாகவே கொழும்பு திரும்பவுள்ளார் என்றும், அவரது மனைவி வரவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பசில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்படமாட்டார் என்றும், அவரைக் கைது செய்வதற்காக பிடியாணை பிறப் பிக்கப்படவில்லை என்றும், பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

தாம் அவருக்கு, நிதிக்குற்றப் பிரிவில் வாக்குமூலம் அளிப்பதற்கு முன்னிலையாகுமாறு சாதாரணமான முறையில் அவருக்கு அறிவிப்போம் என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கடுவெல நீதிமன்றத்தில் திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கில், பசில் ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு தடை விதிக்கக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போனோர் உறவுகளுக்கு உதவி

## ஜப்பானிய உதவியுடன் செயற்றிட்டம்

காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஆணைக்குழுவிற்கு ஜப்பான் அரசாங்கம் நிதி உதவிகளை வழங்க உள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆணைக்குழு ஒன்றை நிறுவியிருந்தார்.

இந்த ஆணைக்குழுவிற்கு மெக்ஸ்வல் பரணகம தலைமை தாங்குகின்றார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆலோசனை வழங்கும் திட்டத்திற்கு ஜப்பானிய தூதரகம் நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நிதி உதவிகளை வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உளவியல் பாதிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் ஆலோசனைகளை வழங்கவும் 80 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி தூதரக அதிகாரிகளுடன் இது குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளதாக ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச தெரிவித்துள்ளார்.

# எங்களின் ஆதரவு 19 இற்கு உண்டு


19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது தொடர்பில் ஆதரவை வழங்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அந்தக் கட்சியின் பிரதம செயலாளர் டில்வின் சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் ஒரு சில குறைபாடுகள் இருந்த போதிலும், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் உள்ள கட்சிகள் அரசியல் நோக்கங்களைப் புறந்தள்ளி மக்களின் நோக்கங்களை நிறைவேற்ற 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு தான் கோரிக்கை விடுப்பதாகவும் டில்வின் சில்வா இங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# காத்திருங்கள் வித்தியாசமான முடிவு எடுப்பேன்



பொறுத்திருந்து பாருங்கள். எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் நான் தீர்மானிக்கவில்லை.

ஆனால் மக்கள் வேண்டுகோள் விடுததால் அதனை என்னால் புறக்கணிக்க முடியாது தான் வித்தியாசமான முடிவு எடுப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய ஊடகமான தகார்டியனிற்குக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் திண்மக்கழிவுகள் கொட்டப்படும்

## யாழ்.மாநகர சபை நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

கல்லுண்டாய் பகுதியில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் கழிவகற்றல் பொறிமுறையைப் பின்பற்றி சுற்றுப்புறச் சூழல் பாதிக்காதவாறு திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கல்லுண்டாய் பகுதியில் உள்ள காணியில யாழ்.மாநகரசபையினால் கொட்டப்பட்டுவரும் திண்மக் கழிவுகளால் ஏற்படும் சூழல் பாதிப்பு பற்றி அப்பிரதேச மக்கள் இந் நடவடிக்கைக்கு எதிராகப் பல நாட்கள் போராட்டம் நடாத்தி வந்துள்ளனர். இதேவேளை இந் நடவடிக்கைக்கு எதிராக பிரதேச சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முதலமைச்சர், அரசாங்க அதிபர், யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 1995 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலப்பரப்பில் திண்மக் கழிவுகளைக் கொட்டிவரும் யாழ். மாநகர சபை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அப்பகுதியில் தொடர்ந்தும் திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்கு முன்வந்துள்ளதுடன் மேற்கொள்ளப்படவுள்ள கழிவகற்றல் பொறிமுறை குறித்து வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளது.(10)

# பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வும்

(யாழ்.நிருபர்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிழவன் காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். காரைநகர பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு, யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராக சுரபி பரமேஸ்வரி கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கல்விக் காருண்ணயன் ஈ.எஸ்.பீ.நாகரத்தினம் கலைமாடக் கோன் சண்முகம் சிவஞானம், தொழிலதிபர் கனகசபை அருள்நேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# முன்னாள் போராளியான ஆசிரியரை காணவில்லை

## மனைவி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளியான ஆசிரியரைக் காணவில்லை என சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவி முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

ஏழாலை வடக்கு ஏழாலை பகுதியைச் சேர்ந்த மகாதேவன் மணிவண்ணன் என்பவரையே காணவில்லை என முறைப்பாடு பதிவு செய்துள்ளார் அவரது மனைவி.

குறித்த நபர் யாழ்.இந்துக்கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார் என்றும் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்து வெளியே சென்றவர் இதுவரையில் வீடு திரும்பவில்லை என்றும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# கரம்பைக் குறிச்சியில் பிடிபட்ட குரங்குகள் வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

(வரணி)

வரணி கரம்பைக்குறிச்சி கிழக்குப் பகுதியில் பொது மக்களால் 13 குரங்குகள் கடந்த வெள்ளிக்கிழமை மடக்கிப்பிடிக்கப்பட்டு காட்டில் விடுவதற்காக வனவிலங்கு அதிகாரிகளிடம் நேற்று முன்தினம் கையளிக்கப் பட்டது.

விவசாயத்திணைக்களமும் வன விலங்கு அதிகார சபையினரும் இணைந்து பயிர்களை நாசம் செய்யும் குரங்குகளது நடமாட்டத்தினைகட்டுப்படுத்தி அவற்றினை பக்குவமாக காட்டில் கொண்டுசேர்க்கும் திட்டம் பொது மக்களது உதவியுடன் தென் மராட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கென அமைக்கப்பட்ட கூண்டுகளில் குரங்குகள் தந்திரமாக வரவளைக்கப்பட்டே அப்புறப்படுத்தப்படுகின்றன.



பெரும் நாசங்களை ஏற்படுத்தி வந்த குரங்குகளை முதன்முதலில் அதிகளவில் கொடிகாமம் கரம்பைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த ஆறுமுகம் கண்ணன் என்பவர் தென்மராட்சியில் ஒரே தடவையில் 13 குரங்குகளை பொறிவைத்து பிடித்துள்ளார்.

தென்மராட்சியில் விவசாயப் பயிர்வகைகள், மற்றும் மாமரங்களில் மாங்காய், முருக்கங்காய், தென்னையில் குரும்பைகள் என பலவகையான பல்லின பயிரவகைகளையும் நாசம செய்து பல இலட்சம் ரூபாய் வருமானத்தை அழித்து விவசாயிகளுக்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தன.

அத்துடன் வீடுகளின் கூரை ஓடுகள் என்பவற்றையும் உடைத்து நாசமாக்கப்பட்ட நிலையில் தென்மராட்சி வாழ் மக்களாலும், கமக்காரர் அமைப்புக்களாலும் தொடர்சியாக விடுக்கப்பட்டு வந்த கோரிக்கையினையடுத்து, வனவிலங்கு அதிகார சபையினரால் விவசாயிகளுக்கு குரங்குகள் பிடிப்பதற்கான பொறிமுறைப் பயிற்சிப்பட்டறை வழங்கப்பட்டு பொறிக் கூடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பொறியில் பிடிக்கப்படும் ஒவ்வொரு குரங்குக்கும் தலா 1000 ரூபாய் வீதம் குரங்கு பிடிப்பவருக்கு வனவிலங்குகள் அதிகார சபையினரால் வழங்கப்படுகிறது.

இதனால் குரங்குகளை பிடிப்பதில் இப்பிரதேச விவசாயிகள், மக்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். (11)

# புனரமைக்கப்பட்ட கட்டடத்துக்கு 'கல்லுபொறிக்க' நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் தலைமை அலுவலகம் நவீன தரமானதாக புனரமைக்கப்பட்டது.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத்திற்கு உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட 'கல்லுபொறிக்க' சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளதாக சபை உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேற்படி விடயமாக சபை உறுப்பினர்கள் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் 5 இற்கு மேற்பட்ட பிரதேச சபை தலைமை அலுவலக கட்டடங்கள் புதிதாக புனரமைக்கப்படு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

எனினும் வலி.தென்மேற்கு கட்டடம் மட்டும் திறந்துவைக்கப்படவில்லை. ஆனால் தவிசாளர்களான அ.ஜெபநேசன், சி.சிவகுமார் ஆகியோர் தவிசாளர்களாக இருந்த போதும் கல்லு பொறிக்கப்படாத சூழ்நிலையே காணப்பட்டது.

தற்போது பதவி வகிக்கும் தவிசாளர் சி.சி.மகேந்திரன் உறுப்பினர்களின் ஒருங்கிசைவோடு கல்லுபொறிக்க எடுத்த நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம் என சபை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை சபைகள் திடீரென கலைக்கப்பட்டால் இவ் வாய்ப்பு இல்லாது போகும் நிலையேற்பட்டிருக்கம் என மேலும் தெரிவிக்கப்பட்டது.(92)

# வங்கித்தொழில் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை மத்தியவங்கி வங்கித்தொழில் உதவியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி ஒன்று உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது 5 பாடங்களில் B தர சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியும், க.பொ.த உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் C தர சித்தியும் பெற்றுள்ள 19 - 23 வயதுக்கு மேற்படாதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை மத்தியவங்கியின் இணையத்தளமான http : www. cbsl . gov. lk இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்ப முடிவு இம்மாதம் 30ஆம் திகதியாகும். (10)

# முரசின் இன்றைய பலன்

(20.04.2015 திங்கட்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 07 ஆம் திகதி.
நுதியை திதி. சித்த யோகம்.
பரணி நட்சத்திரம் பி.ப. 03.26 வரை. பின் கார்த்திகை.
இராகுகாலம் 07.32-09.02 வரை சுபநேரம் 12.02-01.32 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
'விசா' கிட்டியதால் குடும்பத்தவர்கள் குதூகலித்தல்.

**ரிஷபம்**
உங்களை நம்பிச் சிலர்பாரிய பொறுப்புக்களை ஒப்படைக்க நேரிடும்.

**மிதுனம்**
சகபாடிகளுடன் சுமுக நிலையை ஏற்படுத்துதலைக் கைவிட வேண்டாம்.

**கடகம்**
நம்பகத்தன்மை அற்றுப்போனதனால் கொள்வனவைக் கைவிடல்.

**சிம்மம்**
அதிகாரப்பதவிகளில் இருப்பவர்களின் நட்பும் உதவியும் கிடைக்கும்.

**மீனம்**
உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பும் அன்பும் பொறுத்த வேளை கிட்டிவிடல்.

**கன்னி**
நீண்ட நாட்களின் பின்னர் பழைய நட்பு சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டுதல்.

**கும்பம்**
வரவில் திருப்தி இருப்பதினால் கடன்படவேண்டிய நிலை ஏற்படாமை.

**மகரம்**
கனடாவிற்கு வெளிக்கிட்ட பயணம் கொழும்புடன் ஸ்தம்பித்துவிடலாம்.

**தனுசு**
உணர்ச்சியை அடக்கி முகங் கோணாது காரியத்தில் கண்ணாக இருங்கள்.

**விருச்சிகம்**
விபத்து ஏற்பட்டவேளையில் நூலிழையில் தப்பிவிடுதல்.

**துலாம்**
உணவுக்கட்டுப்பாட்டினால் தேக சுகம் மேம்படைதல்.

# விழிப்புலனற்றோருக்கான கிரிக்கெட் கிழக்கிடம் பணிந்தது வடக்கு



(சாவகச்சேரி)

விழிப்புலனற்றோருக்கான கிரிக்கெட் போட்டியில் கிழக்கு மாகாண அணி அபார வெற்றிபெற்றது. வடமாகாண விழிப்புலனற்றோர் சங்கக் கிரிக்கெட் அணிக்கும் கிழக்கு மாகாண விழிப்புலனற்றோர் சங்க கிரிக்கெட் அணிக்குமிடையிலான ருவென்ரி- 20 கிரிக்கெட் போட்டி சாவகச்சேரி இந்து கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிழக்கு மாகாண அணி நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 114 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய வடக்கு மாகாண அணி 11.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. ஒலி எழுப்பக் கூடிய பந்து வீசப்பட்டு இந்த கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றது.

11 பேர கொண்ட அணியில் முற்றாக கண்பார்வையை இழந்த 4 பேர் கட்டாயம் பங்குபற்றுதல் வேண்டும். இவர்கள் துடுப்பெடுத்தாடும் போது ஒரு ஓட்டத்தைப் பெற்றால் அது 2 ஓட்டங்களாக கணிக்கப்படும்.

இவர்கள் நால்வரையும் பி 1 என அழைப்பார்கள்.

கிட்டப் பார்வை குறைபாடு உடைய 3 பேர் பங்குபற்றுவார்கள் . இவர்களை பி. 2 என அழைப்பார்கள்.

40 வீதம் கண்பார்வை தெரிந்த 4 பேர் விளையாடுவார்கள் . இவர்களை பி. 3 வீரர்கள் என அழைப்பார்கள்.

பி.1,பி. 2 வீரர்கள் துடுப்பெடுத்தாடும் போது அவர்கள் பெறும் ஒவ்வொரு ஓட்டமும் சாதாரண ஓட்டமாகவே கணிக்கப்படும். இதுவே இந்த கிரிக்கெட் விளையாட்டின் விதியாகும்.இப்போட்டி நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். (90)

இன்றைய ஆட்டம்

PEPSI IPL

டில்லி எதிர் கொல்கத்தா

இடம் : டில்லி

நேரம் : இரவு 8.00 மணி

## ருவென்ரி-20 கிரிக்கெட் மைக்கல் கிளார்க் கப்டன்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பிக்போஷ் ருவென்ரி-20 தொடரில் பங்கேற்கும் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணிக்கு கப்டனாக மைக்கல் கிளார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.


அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க், (வயது- 34). கடந்த 2012 இற்குப் பின் ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கவில்லை. உள்ளூரில் நடைபெறும் ருவென்ரி-20 போட்டிகளிலும் ஒருபோதும் விளையாடியது இல்லை.

பொதுவாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் அவுஸ்ரேலிய அணிக்காக விளையாடியதால், இப்போட்டிகளை தவிர்த்து வந்தார். தற்போது உலக கோப்பை தொடருக்குப் பின் ஒரு நாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

இதையடுத்து, பிக்போஷ் ருவென்ரி-20 தொடரில் பங்கேற்க முடிவு செய்த கிளார்க்கை, மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி அடுத்த இரண்டு ஆண்டுக்கு கப்டனாக ஒப்பந்தம் செய்தது.

இது குறித்து கிளார்க் கூறுகையில், மெல்பேர்ன் அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர். இந்த அணி கோப்பை வெல்ல என்னால் உதவ முடியும் என உறுதியான நம்பிக்கையுடன் உள்ளேன் என்றார்.

## இறுதியில் ஜோகோவிச்



மான்டி-கார்லோ: மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் முன்னேறினார்.

மொனாகோவில் உள்ள மான்டி-கார்லோ நகரில், ஆண்களுக்கான மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்று. இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபெல் நடால் மோதி-னர். அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில், செக்குடியரசின் தோமஸ் பெர்டிச் 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் பிரான்ஸின் காயல் மான்பில்சை தோற்கடித்து, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

## ஷம்கிர் சதுரங்கத் தொடர்

### 2ஆவது சுற்றையும் சமன் செய்த ஆனந்த்

(ஷம்கிர்)

ஷம்கிர் சதுரங்கத் தொடரின் 2 ஆவது சுற்று ஆட்டத்தை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமன் செய்தார்.

அஜர்பெய்ஜானில் ஷம்கிர் சதுரங்கத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், உலக சம்பியன் நோர்வேயின் கார்ல்சன் உள்ளிட்ட 10 பேர் விளையாடுகின்றனர்.

கார்ல்சனுக்கு எதிராக முதல் சுற்றை சமன் செய்த ஆனந்த், நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்றில் பிரான்ஸின் வாசியர்லாக்ரேவ் மேக்சிமை சந்தித்தார். இதில் ஆனந்த் கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். ஆட்டத்தின் 40ஆவது நகர்த்தலின் போது இருவரும் தங்களது ராணியை பறிகொடுத்தனர். விறுவிறுப்பான இப்போட்டியின் 47 ஆவது நகர்த்தலின் போது, இருவரும் சமன் செய்ய ஒப்புக் கொண்டனர்.

இரண்டு சுற்றின் முடிவில், 2 சமநிலை உட்பட ஒரு புள்ளியுடன் ஆனந்த் 4ஆவது இடத்திலுள்ளார்.

மூன்றாவது சுற்றில் இந்தியாவின் ஆனந்த்,நெதர்லாந்தின் அனிஷ் கிரியை எதிர்கொள்கிறார்.



முன்னணி வீரர்கள் பங்கேற்கும் இப்போட்டியில் மகுடம் சூடவேண்டும் என்ற விருப்புடன் ஆடி வருகின்றேன். அதற்கான தகுதியும் திறமையும் எனக்கிருப்பதாக உணர்கின்றேன். ஓய்வு குறித்து நான் அதிகம் சிந்திக்கவில்லை. இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் இத்துறையில் சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன் என ஆனந்த் போட்டியின் பின் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை 2ஆவது டெஸ்ட்

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நாளை மேற்கிந்தியத்தீவுகளின் கிரன்டாவில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற முதலாவது போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது. இப்போட்டியில் வெற்றியைப் பதிவு செய்ய இரு அணிகளும் முனைப்புடன் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டி குறித்து இங்கிலாந்து அணிக் கப்டன் குக் குறிப்பிடுகையில், முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றிக்கு அருகில் நாங்கள் சென்றபோதும் ஹோல்டரின் அருமையான துடுப்பாட்டத்தின் மூலம் அது கைநழுவிப்போனது. ஆனால், அடுத்த இருபோட்டிகளில் சிறப்பான முறையில் செயற்பட்டு தொடரை வெல்ல முயற்சிப்போம் எனத் தெரிவித்தார்.

## தோல்வியால் புலம்பும் ரோகித்

(மும்பை)

பந்துவீச்சில் சொதப்பியதன் காரணமாகவே சென்னை அணிக்கெதிரான போட்டியில் எங்களால் வெற்றிபெற முடியவில்லை. வெறிக்காக நாங்கள் எல்லா வகையிலும் முயற்சிக்கின்றோம். ஆனால் எதுவும் கைகூடவில்லை என மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

183 ஓட்டங்கள் என்பது சவாலான ஓட்ட எண்ணிக்கை என்று நினைத்தேன். ஆனால் பந்து வீச்சில், எங்களது வியூகங்களை களத்தில் துல்லியமாக செயற்படுத்த தவறிவிட்டோம். நாங்கள் பந்துவீச்சு செய்த விதம் மிகுந்த ஏமாற்றம் அளித்தது. முதல் 6 ஓவர்களுக்குள் அவர்கள் (சென்னை) 90 ஓட்டங்கள் எடுத்து விட்டதால் எங்களுக்கு எந்த வழியும் இல்லாமல் போய்விட்டது. அப்போதே நாங்கள் ஏறக்குறைய தோற்று விட்டோம். வெற்றிக்காக நாங்கள் எல்லா வகையிலும் முயற்சிக்கிறோம். ஆனால் எதுவும் கைகூடவில்லை. தொடர் தோல்விகள் குறித்து அதிகம் நாங்கள் சிந்திக்கவில்லை. அடுத்து நடைபெறவுள்ள போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தோல்விகளிலிருந்து மீள்வோம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மும்பை அணிக்கெதிரான வெற்றி குறித்து சென்னை அணிக் கப்டன் டோனி குறிப்பிடுகையில், மக்கலம், ஸ்மித் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமை காரணமாகவே எங்களால் இலகுவாக வெல்ல முடிந்தது. பந்து வீச்சாளர்களும் முதலில் தடுமாறியபோதிலும் பின்னர் சுதாகரித்துச் செயற்பட்டதன் விளைவாகவே மும்மை அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடிந்தது. அடுத்து நடைபெறவுள்ள போட்டிகளிலும் மிகுந்த கவனமுடன் செயற்பட்டு வெற்றிகளைப் பதிவு செய்ய முயற்சிப்போம் என அவர் தெரிவித்தார்.

## மெஸ்சி 400; பார்சிலோனா அபாரம்



(பார்சிலோனா)

வாலன்சியா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி 2-0 என வெற்றி பெற்றது. இதில் மெஸ்சி பார்சிலோனா அணிக்காக தனது 400ஆவது கோலை பதிவு செய்தார்.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. பார்சிலோனாவில் நடைபெற்ற இதன் லீக் போட்டியில் வாலன்சியா, பார்சிலோனா அணிகள் மோதின. போட்டியின் முதல் நிமிடத்திலேயே பார்சிலோனா அணியின் சாரஸ் ஒரு கோல் அடித்தார். இதற்கு எதிரணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இரண்டாவது பாதியில் இரு அணியும் சம பலத்தை வெளிப்படுத்தியதால், எந்த வீரரும் கோல் அடிக்கவில்லை. ஆட்டத்தின் கூடுதல் (90ஆவது நிமிடத்தில்) நேரத்தில் மெஸ்சி ஒரு கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இறுதிக் கோலைப் பதிவு செய்த மெஸ்சி பார்சிலோனா அணிக்காக 400ஆவது கோலைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச மட்ட இளைஞர் கழக காலபந்து இறுதியில் மகாஜன, யுத் யூனியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச மட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு தெல்லிப்பளை மகாஜன இளைஞர் மற்றும் தெல்லிப்பளை யுத் யூனியன் இளைஞர் அணிகள் முன்னேறியுள்ளன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் அணிகளுக்கிடையிலான பெரு. விளையாட்டுப் போட்டிகள் பிரதேச ரீதியாக தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் தெல்லிப்பளை இளைஞர் சேவை மன்ற அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குகொண்டபோதிலும் அரையிறுதி ஆட்டத்திற்கு தெல்லிப்பளை மகாஜன இளைஞர் அணி, அளவெட்டி கலைவாணி, தெல்லிப்பளை யுத் யூனியன், இளவாலை சிவானந்தா இளைஞர் கழக அணிகள் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜன இளைஞர் கழக அணியும் அளவெட்டி கலைவாணி இளைஞர் கழக அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மகாஜன இளைஞர் கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யுத் யூனியன் இளைஞர் கழக அணியும் இளவாலை சிவானந்தா இளைஞர் கழக அணியும் மோதின. இப்போட்டியில் தெல்லிப்பளை யுத் யூனியன் இளைஞர் கழக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)




## சங்கானை பிரதேச விளையாட்டு விழா வட்டுக்கோட்டையில் நாளை

(சங்கானை)

சங்கானைப் பிரதேச செயலகப் பரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் மற்றும் ஆண், பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் போட்டிகளின் இறுதி ஓட்டங்கள் மற்றும் அஞ்சலோட்டம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வளர்மதி அணியும் மாவத்தை அணியும் மோதவுள்ளன.

சங்கானைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராக இலங்கை மின்சார சபையின் ஓய்வு பெற்ற பொறியியலாளர் வி. வேலுப்பிள்ளை, கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. டேவிட் சதானந்தன் சொலமன், ஓய்வுபெற்ற கிராம. அலுவலர் க. விஜயவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து கழகங்களையும் சேர்ந்த தலைவர், செயலாளர்கள் மற்றும் வீர.வீராங்கனைகள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)

# கைதடி நவபுரம் நவசக்தியின் கரப்பந்து ஆவரங்கால் மத்தி அரையிறுதிக்குத் தகுதி

(கைதடி)

கைதடி நவபுரம் நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு ஆவரங்கால் மத்தி அணி முன்னேறியுள்ளது.

கைதடி நவபுரம் நவசக்தி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் மூன்று போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் அமரகவி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் கைதடி வளர்மதி அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி ஆரம்பம் முதலே போட்டியை தன்வசப்படுத்தியதுடன் தொடர்ந்து புள்ளிகளையும் பெற்றவண்ணமிருந்தது. இதற்கு ஈடு கொடுக்கும் வகையில் வளர்மதி அணி செயற்பட்டபோதிலும் செட்களைக் கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை. நிறைவில் ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

## மாவட்ட பெருவிளையாட்டு வெளியானது அட்டவணை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 23ஆம் திகதி கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இதேபோன்று ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி நாளை மறுதினம் முதல் மறுநாள் வரை வரணி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டி எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒழுங்கமைப்புக்கு அமைவாக போட்டிகள் நடைபெறவுள்ளதாக குறித்த அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடாத்தி முடிக்க ஒத்துழைக்குமாறு போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (93)

## கூடைப்பந்தில் யாழ். இந்து மகளிர் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 43-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வலய சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அணியும் மோதின. இதில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அணி 46-37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. ஆண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 56-48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 62-37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டி நாளை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## யங்ஹென்றீஸ், றோயல் முன்னேற்றம்

அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் கால்பந்துத் தொடரின் அடுத்த சுற்றுக்கு இளவாலை யங்ஹென்றீஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் முன்னேறியுள்ளன.

அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் இரு ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதல் போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல் அணியும் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதுவும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற ஊரெழு றோயல் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் பெற்றதுடன் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியும் பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (93)

## கல்கோபன் சிறப்புப்பந்து வீச்சு; ஜொலித்தது ஜொலிஸ்ரார்

(கொக்குவில்)

கல்கோபன் மற்றும் மதுஷன் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் ஜொலிஸ்ரார் அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். சென்றல் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 28 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலின் 38, கலிஸ்ரன் 29, சுதர்சன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் மூன்று, உமாகரன், பிரியதர்சன், பகீரதன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி கல்கோபன், மதுஷன் ஆகியோரின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 26.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கல்கோபன் 69, மதுஷன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபோதன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# எதனை, எதற்காக மறைக்கிறார்கள்?

சுன்னாகம் நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்து இருப்பதாகக் கூறி, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி சுன்னாகத்தைச் சேர்ந்த மக்களும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப் புகளும் குரல் எழுப்பியும் போராட்டங்களை நடாத்தியும் வருகின்றனர். இதன் உச்சக்கட்ட மாக நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் 07.04.2015 இல் உண்ணாவிரதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தினை கைவிடுமாறு வடமாகாண முதலமைச்சர் வைத்த கோரிக்கையினை மக்கள் நிராகரித்தனர். பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாவது நாளில் கைவிடப்பட்டது.

இதற்கு முன்னதாக இவ் வருடம் ஜனவரியில், சுன்னாகம் சிவன் கோவிலிற்கு முன்பாக இதே பிரச்சினையை முன்வைத்து ஓர் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1995 இல் யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பொழுது அம்மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக, நொதேன் பவர் (Nothern Power) என்ற தனியார் நிறுவனம் இலங்கை மின்சார சபையுடன் இணைந்து டீசல் மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கும் செயற்பாடுகளை சுன்னாகத்தில் ஆரம்பித்தது. இந்த மின் பிறப்பாக்கிகளிலிருந்து கழிவாக வெளியேறும் எண்ணெய் அப்பகுதி நிலத்திலேயே ஊற்றப் பட்டுள்ளது. இதனால் மின் உற்பத்தி நிலையத்தை அண்டிய பகுதிக்-ளில் கிணற்று நீரில் கழிவு எண்ணெய் கலப்புகள் தென்பட்டன.

இதனைத் தொடர்ந்து, 27.01.2015 இல் மல்லாகம் நீதவான் பிறப்பித்த நீதிமன்ற தடையுத்தரவு தீர்ப்பினால் நொதேன் பவர் மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம், மல்லாகம் நீதவான் பிறப்பித்த இந்த தடையுத்தரவை நிராகரித்துள்ளதால், 06.04.2015 இலிருந்து மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2014 இல் உடுவில் பிரதேச செயலாளர் தலைமையில் அமைக்கப் பட்ட குழு ஆய்வு நடத்தி சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பில் கழிவு எண்ணெய் படிமங்கள் இருப்பதாகக் கண்டறிந்தது. மின் உற்பத்தி நிலையத்தைச் சூழவுள்ள 3 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கழிவு எண்ணெய் கலந்திருப்பதாக அக்குழு கூறியது.

2015 ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், சுன்னாகம் நிலத்தடி நீரினை ஆய்வு செய்வதற்காக வடக்கு மாகாண சபை ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. அக்குழுவின் முதற்கட்ட பரிசோதனை முடிவுகளின் அறிக்கை செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் யாழ்ப்பாணத்தில் 20.03.2015 இல் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் நிலத்தடி நீரில் உடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய மாசுக்கள் இல்லையென கண்டறியப்பட்டதாக அக்குழுவினர் தெரிவித்தனர்.



இதனால் இப்போது சுன்னாகம் நிலத்தடி நீர் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததா? இல்லையா? என்பதில் அப்பகுதி மக்களிடையே குழப்ப நிலை காணப்படுகின்றது. உலகில் 88% நோய்கள் அசுத்தமான நீரால்தான் உண்டாகிறதென கூறப்படுகின்றது.

ஆனால் 12.04.2015 இல் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட கூட்டம் ஒன்றில் இந்த நிலத்தடி நீர் விவகாரம் குறித்து சுமார் 3 மணித்தியாலங்கள் ஆராயப்பட்டதன் பின்னர், சுன்னாகம் நிலத்தடி நீரில் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய மூலக் கூறு (ஹைட்ரோ காபன்) இல்லையென மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏனைய மாசுக்கள் இருப்பதாகவும், இறுதி ஆய்வு அறிக்கை வரும் வரையில் பொறுத்திருக்க வேண்டுமென இக்கூட்டத்தில் மேலும் சொல்லப்பட்டுள்ளது.

இக்கூட்டம் வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோர் தலைமையிலேயே நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய வடமாகாண முதலமைச்சர், தாம் அழைப்பு விட்டிருந்தவர்களைத் தவிர்ந்த ஏனையோர் கூட்டத்தில் தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது என்றும், பார்வையாளர்களாக மாத்திரமே இருக்கலாம் எனக் கூறியுள்ளார். அத்துடன் இக்கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இதிலிருந்து இவர்கள் உண்மை எதனையோ மறைக்க முயல்வது தெளிவாகத் தெரிகின்றது. தண்ணீரில் கழிவு எண்ணெய்யுடன் 'அரசியலும் மிதக்கின்றது.

(நன்றி: வானவில் 52)

# இந்த செல்ஃபி எப்படி?

**- சைபர்சிம்மன் - 1**

செல்ஃபி எடுப்பது மோகமா? கலாசாரமா என இன்னும் தீர்மானமாகவில்லை. செல்ஃபிக்களால் பாதிப்பும் உண்டு. சுயபடம் என புரிந்துகொள்ளக்கூடிய செல்ஃபி மீதான விமர்சனங்களும் இருக்கின்றன. ஆனால், செல்ஃபிகளை பயன்படுத்தும் விதத்தில்தான் அவற்றின் சிறப்பு இருக்கிறது என்றும் சொல்லத் தோன்றுகிறது.

புகைப்படக் கலைஞரான அன்டி டேவிதாஸி (Andy Davidhazy) எடுத்துள்ள செல்ஃபி இதற்கு அழகான உதாரணம். உண்மையில் செல்ஃபி இல்லை; செஃல்பிக்கள்! ஆம், சாகசப்பிரியரான அன்டி, மெக்ஸிகோ நாட்டில் இருந்து கனடா வரை 2,600 மைல்களுக்கு பசிபிக் கிரெஸ்ட் ட்ரையல் எனும் சாகசப்பயணத்தை மேற்கொண்டார். சவால்களும் சிக்கல்களும் நிறைந்த இந்தப் பயணத்தின் போது, ஒவ்வொரு மைல் தொலைவிலும் அவர் தன்னை ஒரு சுயபடம் எடுத்துக்கொண்டார். மொத்தப் பயணமும் முடிந்தபோது 2600 சுய படங்கள் அவரிடம் இருந்தன.



இந்த அத்தனை சுய படங்களை வைத்து, கால ஓட்டத்தை உணர்த்தும் வீடியோவாக உருவாக்கி தனது இணைய தளத்தில் வெளியிட்டிருக்கிறார் அன்டி. பயணத்தின் ஆரம்பத்தில் பளிச்சென காணப்படுபவர், கடைசி சுய படத்துக்கு வரும்போது தாடி வளர்ந்த முகத்துடன் காணப்படுகிறார். எடையும் கணிசமாகக் குறைந்திருக்கிறது. அவர் எதிர்கொண்ட சவால்களை இந்தப் படங்களே அழகாக உணர்த்துகின்றன. இந்தப் பயணத்தை மையமாகக் கொண்டு அவர் உருவாக்கியுள்ள ஆவணப்படத்துக்கான முன்னோட்டமாக, இந்த சுய படத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

ஆனால், செல்ஃபி மோகத்துக்கான மோசமான உதாரணமாகவும் ஒரு செய்தி சமீபத்தில் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அமெரிக்காவின் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள ஈஸ்ட் வில்லேஜ் ஆலையில் நடைபெற்ற வெடிவிபத்தில் 25 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த பகுதியில் ஏழு பெண்கள் செல்ஃபி ஸ்டிக் மூலம் தங்களை படம் எடுத்துக்கொண்டுள்ளனர். விபத்து நடந்த பகுதியை அவர்கள் ஏதோ சுற்றுலா இடம்போல் கருதியதும், அந்த இடத்தின் நிலைமையை உணராதவர்களாக அந்தப் புகைப் படத்துக்கு அவர்கள் புன்னகைத்தபடி போஸ் கொடுத்ததும் திகைக்க வைத்துள்ளது.

முதலில் டுவிட்டரில் வெளியாகி, பின்னர் வலைப்பதிவில் வெளியான அந்தப் புகைப்படம், அதன்பிறகு நியூயோர்க் போஸ்ட் நாளிதழில் வெளியிடப்பட்டது. இது இதயமில்லாத செயல் என பலரும் விமரிசித்துள்ளனர். ஸ்டேடஸ் அப்டேட்டுக்காக செல்ஃபி எடுக்கலாம் தப்பில்லை, ஆனால் அதற்காக மனிதாபிமானத்தை மறந்துவிடுவதா?

அன்டி டேவிதாசியின் செல்ஃபி பயணத்தைப் பார்க்க - www.lostorfound.org



### 2. இணையத்தை உலுக்கிய புகைப்படம்

இணையத்தை முறிக்கும் முயற்சி (breaking the internet) என்ற பதம் அடிக்கடி பயன்படுத்தப்படுவதை பார்க்கலாம். இணையத்தின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஒரே நேரத்தில் ஈர்த்து, அதன் உள்கட்டமைப்பு வசதிக்கு சோதனை உண்டாக்கும் அளவுக்கு பரவும் தன்மை கொண்ட விஷயங்கள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன.

நடிகை கிம் கர்தாஷியான், சில மாதங்களுக்குத் தனது கவர்ச்சி போஸ்கள் மூலம் இதற்கு முயன்று தோற்றுப்போனார்.

ஆனால் சிரியாவில், போருக்கு நடுவே எடுக்கப் பட்ட புகைப்படம் ஒன்று இணையத்தை உலுக்கி யிருக்கிறது. பிஞ்சுக் குழந்தை ஒன்று கையைத் தூக்கி சரண் அடைவதுபோல் இருக்கும் புகைப்படம் அது. கண்களில் மிரட்சியுடன் அந்தக் குழந்தை, கமெராவை பார்த்து துப்பாக்கி என நினைத்து பயத்தில் கைகளை உயர்த்தியிருக்கும் அந்தப் புகைப்படம், போரின் பாதிப்பை அழுத்தமாக உணர்த்துகிறது.

இந்தப் படம்தான் இணையத்தில் வைரஸாகி இருக்கிறது. மத்திய கிழக்கில், காஸாவில் வசிக்கும் நாடியா அபு ஹசன் எனும் புகைப்படச் செய்தியாளரால் டுவிட்டரில் பகிர்ந்துகொள்ளப்பட்ட இந்தப் படம், பார்த்தவர் நெஞ்சை உருக்கி, கண்ணீர் விட வைத்தது. இதே உணர்வை வெளிப்படுத்தும் குறிப்புடன் பலரும் இதை தங்கள் சமூக வலைப் பின்னல் பக்கங்களில் பகிர்ந்துகொண்டனர். 11,000 முறைக்கு மேல் ரிடுவீட் ஆன அந்தப் படம், ரெட்டிட் தளத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது.


இதற்கிடையே, இந்தப் படம் போலியானது என்றும் சிலர் புகார் தெரிவிக்க, பிபிசி செய்தித் தளம் இதுபற்றி ஆய்வு செய்து, இந்தப் படத்தின் பின்னே உள்ள கதையை வெளியிட்டது. அந்தப் படம் தான் எடுத்தது அல்ல பகிர்ந்துகொண்டது என அபு ஹசன் கூறியுள்ளார்.

உண்மையில், இந்தப் படம் 2012இல் எடுக்கப்பட்டது. உஸ்மான் சாகிர்லி எனும் துருக்கி பத்திரிகையாளர் இந்தப் புகைப்படத்தை எடுத்துள்ளார். துருக்கி எல்லை அருகே சிரியாவில் உள்ள அகதிகள் முகாமில் இந்தப் படம் எடுக்கப்பட்டதாகவும், தான் பயன்படுத்திய டெலிபோட்டோ லென்ஸ் காரணமாக, அதை துப்பாக்கி என நினைத்து அந்தக் குழந்தை மிரண்டுவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் படத்தை எடுத்த பிறகு அந்தக் குழந்தை மிகவும் பீதியடைந்து காணப்பட்டதாகவும், பொதுவாக குழந்தைகள் கமெராவை கண்டால் வெட்கப்படுவார்கள் அல்லது ஓடிவிடுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். பெரியவர்களைவிட குழந்தைகள் அப்பாவித்தனத்துடன் போரின் பாதிப்புகளை உணர்த்திவிடுவதை அகதிகள் முகாம்களில் பார்க்கலாம் என்கிறார் அவர். இந்தப் புகைப்படமே அதற்கு சாட்சி.

(தொடரும்)

# இனப்பெருக்கத் தொகுதி மற்றும் குருதியினூடாகக் கடத்தப்படும் நோய்கள்




தற்போதைய சூழ்நிலையில் குருதி, இனப் பெருக்கத் தொகுதி மற்றும் ஊசிகள் மூலம் கடத்தப்படும் நோய்களின் தாக்கத்துக்குட்படுபவர் களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், இந்த நோய்கள் கடத்தப்படும் முறைகள், நோய் அறிகுறிகள், நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி பொது மக்க ளுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

2005 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அறிக்கையின்படி உலக சனத்தொகையில் 15 - 49 வயதுக்குட்பட்டவர்களில் ஒவ்வொரு ஆண்டும் 448 மில்லியன் பேர் புதிதாக இனப்பெருக் கத் தொகுதியினால் கடத்தப்படும் நோய்களின் தொற்றுக்கு ஆளாகின்றனர். இலங்கையில் இனப்

பெருக்கத் தொகுதியூடாகக் கடத்தப்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது.


உலக சனத்தொகையில் ஒவ்வொரு ஆண்டும் 2 பில்லியன் பேர் ஈரல் அழற்சி வைரசின் தொற்றுக்கு இலக்காவதோடு, ஒவ்வொரு ஆண்டும் 600,000. பேர் கெப்பரைரிஸ் B (Hepatitis B) வைரசினால் ஏற்படுத்தப்படும் ஈரலழற்சி நோயினால் இறக்கின்றனர். ஒவ்வொரு வருடமும் 150 மில்லியன் பேர் கெப்பரைரிஸ் C (Hepatitis C) வைரசின் தொற்றுக்கு இலக்காவதோடு ஒவ்வொரு ஆண்டும் 350000 பேர் Hepatitis C வைரசினால் ஏற்படுத்தப்படும் ஈரல் நோய்களினால் இறக்கின்றனர்.

### நோய்கள் கடத்தும் முறைகள்

இனப்பெருக்கத்தொகுதி மூலம் கடத்தப்படும் நோய்கள் பிரதானமாக உடலுறவின்போதே ஒருவரிலிருந்து மற்றையவருக்கு கடத்தப்படுகிறது. அவற்றுள் HIV மற்றும் சிபிலிஸ் வைரசுக்கள் இழையப் பரிமாற்றம், குருதிப் பரிமாற்றம் மூலமாகவும் பிறப்பின் போதோ கருவுற்றிருக்கும் போதோ தாயிலிருந்து குழந்தைக்குக் கடத்தப்படுகின்றது.

Hepatitis B வைரசானது நோய்த் தொற்றுடைய குருதி வேறொருவருடைய குருதியை அடைவதன் மூலமும், வியர்வை, கண்ணீர், உமிழ்நீர், சுக்கிலப் பாய்பொருள், யோனிவழி சுரப்புக்கள், மாதவிடாய் குருதி, தாய்ப் பால் மூலமாகவும், தொற்றுடையவ ருக்கு பயன்படுத்திய ஊசி, சத்திர சிகிச்சை உபகரணங்கள், பாதுகாப்பற்ற குருதிப்பரிமாற்றம், பச்சை குத்துதல், மகப்பேற்றின் போது தாயிலிருந்து குழந்தைக்கும், பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமும் கடத்தப்படுகின்றது.

கெப்பரைரிஸ் C (Hepatitis C) வைரசானது நோய்த் தொற்றுடைய குருதி வேறொரு-வருடைய குருதியில் கலப்பதன் மூலமும், பாதுகாப்பற்ற குருதிப் பரிமாற்றம் மற்றும் தடுப்பூசி ஏற்றும் முறை, ஊசி மூலமான போதைவஸ்துப் பாவனை, மகப் பேற்றின் போது தொற்றுடைய தாயிலிருந்து குழந்தைக்கு, பாது காப்பற்ற உடலுறவு மூலமாகவும் கடத்தப்படுகிறது.




### இனப்பெருக்கத் தொகுதியினால் கடத்தப்படும் நோய்களுக்குரிய அறிகுறிகள்

சிறுநீர் கழிக்கும்போது நோவு / எரிவு ஏற்படுதல்
அடிவயிற்றில் வலி ஏற்படுதல்
ஆண் அல்லது பெண் இனப்பெருக்க உறுப்பிலிருந்து திரவம் வெளியேறுதல்
உடலுறவின் போதான வலி
விதையில் வலி ஏற்படும்
அசாதாரணமான மாதவிடாய் குருதிப்பெருக்கு
இனப்பெருக்க உறுப்பு மற்றும் மலவாசலில் அரிப்பு ஏற்படல்

### ஈரலழற்சி நோய்க்கான அறிகுறிகள்

உணவின் மீதான நாட்டம் குறைதல்
களைப்பு
இலேசான காய்ச்சல்
தசை மற்றும் மூட்டுவலி
வாந்தி அல்லது வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வு
வயிற்றுவலி

### இனப்பெருக்கத் தொகுதியினூடாக கடத்தப்படும் நோய்களுக்கான தடுப்பு முறைகள்

பாதுகாப்பான உடலுறவைப் பேணுதல் - தொற்றற்ற துணையுடன் உடலுறவைப் பேணுதல்

உடலுறவின் போது ஆண், பெண் உறைகளை (Condoms) உபயோகித்தல்.

தடுப்பூசிகளை உபயோகித் தல், தடுப்பூசி மூலம் கெப்பரை ரிஸ் B (Hepatitis B) வைரசினா லான தொற்றைத் தடுக்க முடியும்.

நோயறிகுறிகள் உள்ளவர்கள் மட்டுமல்லாது, நோய் தொற்று வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளவர்களும் மருத்துவ ஆலோசனையை நாடுதல் வேண்டும்.

### கெப்பரைரிஸ் [Hepatitis] வைரசினால் கடத்தப்படும் நோய்களுக்கான தடுப்பு முறைகள்

Hepatitis வைரசினால் ஏற்படும் தொற்றுக்கள் சம்பந்தமான பூரண அறிவையும், விழிப்புணர்வையும் மக்களுக்கு ஏற்படுத்துதல்

ஈரல் அழற்சி வைரசிற்கு எதிரான தடுப்பூசிகளை ஏற்றுதல்

பாதுகாப்பான முறையில் ஊசி ஏற்றுதல்

பாதுகாப்பான முறையில் உடலுறவு கொள்ளுதல் மற்றும் உடலுறவு கொள்ளும் போது பாதுகாப்பு பொறிமுறைகளைப் (Condoms) பயன்படுத்துதல்

ஊசி மூலமான போதைவஸ்து பாவனையைத் தடுத்தல்

பாதுகாப்பான குருதிப்பரிமாற்றம் பற்றிக் கவனம் செலுத்துதல்

ஆரம்பத்திலேயே நோய்த்தொற்றினை இனங்கண்டு சிகிச்சை வழங்குதல்

நோய்த்தொற்று உடையவர்களிலிருந்து மற்றவர்களுக்குத் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

(நன்றி: Jaffna Diabetic Centre)

## மனிதனைப் போல்....



மனிதனைப் போலவே நுண்ணறிவு கொண்டவை இரண்டு. ஒன்று, சிம்பன்சி; மற்றொன்று, டொல்பின். இரண்டுமே குட்டி ஈனும் பாலூட்டி இனம். டொல்பின் உடலின் முன் பக்கத்தில், துடுப்புகள் போல் இருப்பது, அதன் முன்னங்கால்களே! பின் கால்களும், இடுப்பெலும்பும் அதற்கு கிடையாது. வால் முனையில், துடுப்பு போல் இரண்டாகப் பிரிந்திருக்கும். இதன், ஆயுட்காலம், 25 ஆண்டுகள்.

ஏதேனும் ஒரு டொல்பின் நோய்வாய்ப் பட்டாலோ, காயம் பட்டாலோ, மற்ற டொல்பின்கள், அது மூழ்காமல் இருக்க, தாங்கிப் பிடிக்கும். பெண் டொல்பின் குட்டி போடும் போது, மற்ற பெண் டொல்பின்கள், அதைச் சுற்றி பாதுகாக்கும் பிறந்த குட்டி, முதல் சுவாசம் செய்ய, நீர்ப்பரப்பிற்கு மேல் கொண்டு செல்லும். டொல்பினின் உணவு, சின்னச் சின்ன மீன்கள். கூட்டமாகச் சென்று, இரையைக் கண்டதும், அதைத் தப்ப விடாமல் சுற்றி வளைத்து, பின், ஒவ்வொன்றாக இரையைப் பிடித்து தின்னும்.

இவை, விசில் ஒலி, "கிரீச்" மற்றும் "கிளிக்" ஒலி - என பலவிதமான ஒலிகள் மூலம் ஒன்றோடொன்று பேசிக் கொள்கின்றன.

('நீர் வாழ்வன' நூலிலிருந்து)

## சிலேடை விருந்து!

அகத்தியர், தன் கமண்டலத்தில் சமுத்திரத்தை அடக்கினார் அது, அவரது தவ வலிமை.

காளமேகப் புலவர், குடத்திலே கங்கையை அடக்கிக் காட்டுகிறார். இது, அவரது தமிழ் வலிமை.

'குடத்திலே கங்கை அடங்கும்...' என்ற ஈற்றடி கொடுத்து, வெண்பா தருமாறு காளமேகத்திடம் கேட்டனர் மற்ற புலவர்கள்.

குடத்திலே, கங்கையை எப்படி அடக்குவது? காளமேகம், மறுநொடியே தம் தமிழ் மந்திரத்தால் அடக்கிக் காட்டினார்.

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் – பெண்ணை
இடத்திலே வைத்த ஈசன், சடாம
குடத்திலே கங்கை யடங்கும்.

பொருள்: விண், மண் மற்றும் மலை என்று எதற்கும் அடங்காத கங்கை, இறைவனின் சடாமுடியில் (சிவபெருமான் தலையில்) அடங்கியிருக்கிறது!



('சிலேடை விருந்து' நூலிலிருந்து)

## சில யோசனைகள்...



- சிலருக்கு தொடர்ந்து பயணம் செய்ய நேரிட்டால் சூட்டினால் வயிற்று வலி ஏற்படலாம். இதைத் தவிர்க்க ஒரு போத்தல் குடிதண்ணீரில் இரண்டு கரண்டி சீரகம் போட்டு எடுத்துச் சென்று அடிக்கடி பருகி வர சூட்டினால் ஏற்படும் உபாதைகள் குறையும்.
- அலுவலக நாற்காலியில் அமர்ந்து பணிபுரியும்போது சுமாராக 45 பாகை யளவில் சாய்வாக அமர்ந்து இருத்தல் நலம். நேராக இருப்பது முதுகெலும்பை நோக வைக்கும்.
- கழுத்துவலி அதிகமானால் தேங்காய் எண்ணெய்யில் பச்சைக் கற்பூரத்தைச் சிறிது போட்டுச் சூடாக்கி வலி உள்ள இடத்தில் தடவி வந்தால் கழுத்து வலி நீங்கிவிடும்.
- பட்டு வாங்கும்போது ஒரிஜினல் பட்டு துணிதானா என்று கண்டுபிடிக்க கைவிரலைத் துணி மீது வைத்து அழுத்தினால் கைரேகை பதிந்ததும் சட்டென மறைந்துவிடும். வேறு நூல்கள் கலந்திருந்தால் கைரேகை அப்படியே இருக்கும்.
- ரொய்லெட்டில் ஃப்ளஷ் ராங்கின் உள்ளே தண்ணீரில் மூழ்குமாறு தேய்ந்த சோப் துண்டுகளை அடியில் துளையுள்ள சவர்க்காரப் பெட்டியில் வைத்துக் கட்டித் தொங்கவிட்டால் ரொய்லெட் பளிச். நறுமணமும் பாத்ரூம் முழுவதும்.
- உபயோகிக்கப்படாத புதிய தபால் முத்திரைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு விட்டனவா? அவற்றைச் சில நிமிடங்கள் நீங்கள் ப்ரீசரில் வைத்து எடுத்தால் சுலபமாக, கிழியாமல் பிரிக்க முடியும்.
- செல்லோ டேப்பை உபயோகித்த பின் அதன் நுனியில் சிறு நூலை ஒட்டி வைத்தால், அடுத்தமுறை நுனியைத் தேடவேண்டிய அவசியம் இருக்காது.
- துணிகளைத் துவைத்த பின்னர் காற்றாட காய வைப்பது நன்று. அதற்குரிய (னுசலநச) மின்சாதனங்களைப் பாவிப்பதால் 700 றாத்தல் கரியமில வாயு காற்றில் கலக்காமல் தவிர்க்கலாம்.
- ஃபுளோரசன்ட் (flouresent) போன்ற விளக்குகளால் 300 றாத்தல் காற்று வெப்பமடையாமல் தடுக்கலாம்.
- முறையான காற்று நிரப்பப்பட்ட கார் டியூப்களால் ஆண்டுக்கு 1000 றாத்தல் கரியமில வாயு உற்பத்தியாகாமல் தடுக்கலாம்.



# நிகழ்வுகளின் பதிவுகள்....

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதி கிளையில் கடந்த புதன்கிழமை மன்மத வருடப்பிறப்பில் மோகன் ரூபினி (நீர்வேலி) திருமணப்பரிசுக்குரிய தங்கப்பவுனை தந்தை ஏ.அழிர்தலிங்கம் கிளை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதுடன், சிறுவர்களுக்கான புதுவருட பரிசுகளையும் வழங்குவதைக்காணலாம். (105)




வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிய 4 அலுவலர்கள் வருடாந்த இடமாற்றத்தில் செல்வதை முன்னிட்டு பிரியாவிடை நிகழ்வில் கௌரவிக்கப்படுவதைக்காணலாம். (90)



காவேரி கலா மன்றத்தின் கோவில்வயல் சமுதாய நாடகக் குழுவினருக்கான நாடகப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது... (90)





வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட பருத்தியூர் வரலாற்று ஆவணங்கள் குறும்படங்கள் இறுவெட்டு வெளியீடு இடம் பெறுவதைக் காணலாம். (18)

பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளியில் இந்த வருடத்துக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் சி. குலவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது புதிய மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கி முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் வரவேற்பதைக் காணலாம்.









ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வட மாகாண கல்விப் பண்பாட்டு ச.சத்தியசீலன் தலைமையில் அண்மையில் அன்று இடம் பெற்ற போது .தமிழ சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம் பெறுவதைக் காணலாம்.

# சுன்னாகம் பேருந்து நிலையத்தில் ஒழுங்கற்று நிறுத்தப்படும் பேருந்துகள்

## மக்கள் சிரமத்தில்

சுன்னாகம் மத்திய பேருந்து நிலையத்தில் ஒழுங்குமுறையின்றி நிறுத்தப்படும் தனியார் பேருந்துகள், மற்றும் ஏனைய வாகனங்களால் பயணிகள் பெரும சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் குறிப்பிட்ட தரிப்பிடத்தில் தரிக்க முடியாதுள்ளதாகவும் இதனால் பயணிகள் பேருந்துகளில் பாதுகாப்பாக ஏறி, இறங்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பேருந்து நிலையத்தில் பயணிகளை இறக்க முடியாத பேருந்துகள் கந்தரோடை வீதியில் இறக்கி விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பேருந்து நிலையம் தற்போது நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் தரித்து நிற்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கு படுத்தப்படாமல் இருப்பதனாலேயே மேற்படி சிரமம் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பேருந்து நிலையத்திற்கு சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை போன்ற பகுதிகளுக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருநதுகள் வந்து செல்வது வழக்கம் இப் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் பேருந்துகள் ஒழுங்குமுறையின்றி நிறுத்தப்படுவதால் பேருந்துகளைத் தவற விடும் சந்தர்ப்பமும் காணப் படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பேருந்து நிலையத்தில் தனியாரின் ஏனைய வாகனங்களும் நிறுத்தப்படுவதால் பேருந்துகள் வந்து செல்வதற்கு இடையூறாகக் காணப்படு வதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பேருந்து நிலையத்தில் அரச மற்றும் தனியார் பேருநதுகள் ஒழுங்கு முறையாக நிறுத்தப்பட்டு மக்கள் பேருந்து சேவையில் பூரணதிருப்தி பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றனர். (66)

## "கூலித்தமிழ்" நூல் வெளியீட்டு விழா

மு.நித்தியானந்தனின் "கூலித்தமிழ்" நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை இலண்டன் ஹரோவில் சொறாஸ்ரியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில் தமிழகத்தின் பிரபல ஆவணப்படத் தயாரிப்பாளரான அம்ஷன்குமார் சிறப்புரையாற்றவுள்ளார்.

வழக்கறிஞர் செ.சிறீகந்தராஜா ஊடகவியலாளர் காரை இளையதம்பி தயானந்தா, தோழர்வேலு, இளைய அப்துல்லா மாதவி சிவலீலன் ஆகியோரும் இந்நூல் வெளியீட்டுவிழாவில் உரை நிகழ்த்தவுள்ளனர்.


இ.பத்மநாப ஐயர் வெளியீட்டுரை நிகழ்த்த 'நாழிகை' ஆசிரியர் சு.மகாலிங்கசிவம் நூலை வெளியிட்டு வைப்பார். (10)

# பத்திரிகைகள் இன்றி நூலகம் சிரமத்தில் வாசகர்கள்

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை தலைமைக் கட்டடத்தில் இயங்கி வரும் மானிப்பாய பிரதேசசபை பொது நூலகத்தில் அனைத்து பத்திரிகைகளும் வைக்கப்படாமையால் வாசகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டிலிருந்து வெளிவருகின்ற தினசரிப் பத்தரிகைகளும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையும் மாத்திரமே வாசகர்களுக்காக வைக்கப்படுவதாகவும் ஏனைய பத்திரிகைகளை பெற்றுக்கொள்வதற்கு சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அனைத்து பத்திரிகைகளையும் வாங்கிப்பார்க்கக கூடிய நிலையில் இப்பகுதி மக்கள் இல்லை அதுமட்டுமன்றி அனைத்துப் பத்திரிகைகளையும் இலகுவாகப் பெறக்கூடிய வசதிவாய்ப்பும் குடாநாட்டில் இல்லை எனவே அனைத்து பத்திரிகைகளையும் பார்த்து பயன்பெறும் வகையில் அனைத்து பத்திரிகைகளையும் நூலகத்தில் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை உரிய தரப்பினர் எடுக்க வேண்டும் என வாசகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66).



மருதங்கேணி கட்டைக்காடு கப்பலோட்டிய மாதா கோயில் சுனாமியால் சிதைவடைந்து காணப்பட்டது. பின்னர் இப்பகுதி மக்கள் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டுவருவதைக்காணலாம். (25)

# பணம் அறவிடப்படும் வைத்தியசாலை வாகனத்தரிப்பிடம்

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவில் பகுதியில் இயங்கும் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள், நோயாளர்களைக்கொண்டு செல்வோரின் வாகனங்களுக்கு வாகனப்பாதுகாப்பு நிலையத்தில் பணம் அறவிடப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கு வாகனத் தரிப்பிடத்துக்குப் பணம் செலுத்துவதற்கு முடியாமல் இருப்பதாகக்குறிப் பிடுகின்றனர்.

மக்களுக்கு சேவை வழங்குவதற்கு என அமைக்கப்பட்ட வைத்தியசாலை வாகனத்தரிப்பிடத்திற்கு பணம் அறவிடப்படுவது நீதியற்ற செயலெனவும் இவ் விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)




## மக்கள் வங்கி
## வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் திறந்த போட்டிப் பரீட்சை

நிதித்துறையில் தொடர்ந்தும் நிலவி வரும் மாற்றங்களுக்கு உறுதியுடன் முகம் கொடுக்கும் வகையில் வணிக வங்கியாக தனது ஸ்திரத் தன்மையைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொள்ளும் பணியில் மக்கள் வங்கி ஈடுபட்டு வருகின்றது. அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக தமது குழுவுக்கு உறுதுணையாக தமது பங்களிப்பை வழங்கக்கூடிய செயற்திறன் மிக்க சிறந்த இளைய சமூகத்தினரை நாடு முழுவதும் உள்ள கிளைகளில் சேவையாற்றுவதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது.

எனவே தமது குழுவுடன், அர்ப்பணிப்புடன் நிறுவன நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு பங்களிப்பை வழங்குவது உமது அவாவெனில் இதுவே உங்களுக்குப் பொருந்தும் சரியான தொழிலென மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

எனவே விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது 5 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 5 திறமைச் சித்திகளுள் கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களில் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தது 3 பாடங்களில் சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பொது ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருப்பின் மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.

கணனி தொடர்பான அனுபவமும் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 24 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம்), மக்கள் வங்கி தலைமை அலுவலகம், இல.75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வாடிக்கையாளர் சேவை உதவியாளர்' மற்றும் மாவட்டத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும்.

## கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை பதவி வெற்றிடங்கள்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் கீழுள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் கீழுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. பிரதிப் பொது முகாமையாளர் (இயக்கம்)
2. முகாமையாளர் (திட்டமிடல்)
3. உதவி முகாமையாளர் (திட்டமிடல்)
4. உதவி முகாமையாளர் (சட்டம்)
5. கடல்சார் சூழல் அலுவலர்கள்
6. உதவி கடல்சார் சூழல் அலுவலர்கள்
7. செயலாளர்
8. கடல்சார் மாசுபடுத்தலை தவிர்க்கும் துறை உதவியாளர்கள்

பட்டதாரிகள் முதல் க.பொ.த. உயர்தரம் வரை படித்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். இங்கு குறிப்பாக ஆங்கில மொழியில் பணியாற்றுவதற்கான தேர்ச்சி மற்றும் கடல்சார் சூழல் அலுவலர்கள், கடல்சார் மாசுபடுத்தலை தவிர்க்கும் துறை உதவியாளர்கள் சுழியோடுதல் அல்லது படகு மற்றும் தோனி ஆகியவற்றைச் செலுத்துவதற்கான இயலுமை அத்துடன் நீந்தும் இயலுமை ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் அண்மையில் பெறப்பட்ட குணச்சான்றிதழ்கள் இரண்டு உட்பட இரண்டு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ், அனைத்து கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்ட தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, இல.758, பேஸ் லைன் வீதி, கொழும்பு-09 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## வினைத்திறமைக்காண் பரீட்சை

சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களின் முதலாவது வினைத்திறமை காண் வாய்மொழிப் பரீட்சை 2014 (2015) எதிர்வரும் 27ஆம், 28 ஆம் திகதிகளில் கொழும்பில் மட்டும் நடைபெறவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தொகுப்பு :- சி.என்.எச். சாள்ஸ்

# ஆயுள் முடிகிறது 100 நாள் திட்டத்துக்கு

## காத்திருங்கள் தெற்கில் அதிரடி மாற்றங்கள் நடக்க வாய்ப்பு

இலங்கை அரசியல் வரலாற்றில் பலவிதமான அதிரடியான மாற்றங்கள் நிகழக்கூடிய வாரமாக இவ்வாரம் அமையவுள்ளதாக அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் அடங்கிய நூறு நாள் வேலைத்திட்டத்தின் முடிவு நாளும் இவ் வாரத்திற்குள் வருகிறது.

அத்துடன் நாடாளுமன்றத்தில் 19 ஆவது மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுமா? அல்லது பிற்போடப்படுமா? அல்லது சமர்ப்பிக்கப்பட்டு அதனை அங்கீகரிப்பதில் இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுமா? எனும் கேள்விகளுக்கும் இவ்வாரம் தீர்வு கிடைக்கவுள்ள அதேவேளை நாடாளுமன்றம் இவ்வாரம் அதாவது 23 ஆம் திகதி நள்ளிரவு கலைக்கப்படலாம் எனும் தகவல்களும் அரசியல் உயர் மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது.

இவ்வாறு பல விடயங்களிலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமக்குள் ஒற்றுமையை வெளிக்காட்டி வருகின்ற போதிலும் அக்கட்சிகளுக்குள் இருக்கும் சிலர் முரண்பாடானதும், குதர்க்கமானதுமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி ஒருபுறமும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அம்மையார் கூட்டிலான சுதந்திரக் கட்சி மற்றொரு புறமும். இதனை விட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சுதந்திரக் கட்சியின் மற்றொரு அணி இன்னொரு புறமும் உறுப்பினர்களைத் திரட்டி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

இந்த சகலவிதமான இழுபறிகளுக்கும் இவ்வாரம் தீர்வு கிடைக்கும். அதிலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அனைவரதும் சுயரூபங்கள் வெளிச்சத்திற்கு வரும். அதன் பின்னர் பொதுத் தேர்தலில் மக்கள் தாம் விரும்பும் தமது தலைமையைத் தேர்ந்தெடுப்பர் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஆளும் கட்சியினர் 20ம் மற்றும் 21 ஆம் திகதிகளில் 19 மற்றும் 20 ஆம் திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்க தீர்மானித்திருந்தனர். இது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

19 ஆம், 20 ஆம் திருத்தங்கள் சமகாலத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பிடிவாதமாக உள்ளனர். மகிந்தவின் மீள் எழுச்சி பற்றிய சிக்கல்களால் . சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை அதிருப்தியடைய வைக்க விரும்பாத ஜனாதிபதி மைத்திரியும், இதே நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற ஐ.தே.கவிற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த பின்னணியில் பிரதான இரண்டு கட்சிகளும் கலந்துரையாடி இரண்டு திருத்தங்களையும் ஏக காலத்தில் நிறைவேற்றுவதென்ற முடிவிற்கு வந்துள்ளன.

·இன்றும் நாளையும் 19 ஆவது திருத்தம் குறித்த விவாதத்திற்கு சபை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டு, நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இரண்டு நாட்களிலும் விவாதத்துக்காக மொத்தம் பதினொன்றரை மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இரு நாட்களும் விவாதத்தை நடாத்தி முடித்துவிட்டு வாக்கெடுப்பிற்கு விடப்படாமல் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கவும், அதற்கிடையில் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான 20 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டதன் பின்னர் இரண்டையும் ஒரே நாளில் நிறைவேற்ற பிரதான கட்சிகள் இரண்டும் கலந்துரையாடி இணக்கம் கண்டிருப்பதாக அறியவருகிறது.

பெரும்பாலும் ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டையும் நிறைவேற்றிக்கொண்டதன் பின்னர் மே மாதம் முதல் வாரமளவில் நாடாளுமன்றம் கலைக்கப்படக்கூடிய சாத்தியம் தென்படுவதாகவும் கூறப்படுகிறது.

## மனிதாபிமான உதவி வனுவாடு குடியரசுக்கு

கடந்த மாதம் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வனுவாடு குடியரசுக்கு 50,000 அமெரிக்க டொலர் நிதியை இலங்கை வழங்கியுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கான பதில் உயர்ஸ்தானிகர் பி. செல்வராஜ். கென்பராவில் அமைந்துள்ள வனுவாட்டு உயர்ஸ்தானிகரை நேற்றுமுன்தினம் சந்தித்து இந்நிதிக்கான காசோலையை வழங்கினார் என அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் வழங்கப்பட்ட இந் நிதியுதவியை பாராட்டிய வனுவாட்டு உயர்ஸ்தானிகர் இருநாடுகளுக்கிடையிலான உறவு மேலும் மேம்பட இதுவொரு சந்தர்ப்பமாக அமையும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மாவட்ட காரியாலயம் திறப்பு

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் மாவட்ட அலுவலகம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வவுனியா, குருமன்காடு பகுதியில் குறித்த அலுவலகம் அமைந்துள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், கட்சியின் வடக்கு, கிழக்கு அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், வர்த்தக சங்கத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

## பரமர் சங்கமம்



மனிதனைப் பிறப்பிக்கும் ஆஸ்பத்திரி. சுகாதார அமைச்சு நிர்வாகமே உயிரைக் காக்காமல் வாங்கும் பணியிலும் ஈடுபடுவது யாழ்குடாநாட்டி லேயே நடந்து கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுவதைக் கேட்டால் பரமர் பரகசியப்படுத்தாமல் சும்மா இருந்திடுவாரே!

எனக்குந்தக் கோதாரியளைப் பற்றி என்ன தெரியும்? அலன்டைக்கொருநாள் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்குப் போனன். அங்கை வேலை செய்யிற வெள்ளைக்கோட்சூட் போட்ட உயரதிகாரிதான் இன்னொருவருக்கு இந்த விசயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

உப்புடியான விசயங்களெண்டால் பரமரின் காது பாம்புக்காது பாருங்கோ வடிவாக் கேட்டுது பாம்புக்குக் காது இல்ல என்கிறவையும் இருக்கினம. எதுவோ என்ரை காதிலை விழுந்ததை உங்களோடும் கதைப்பமெண்டுதான் சொல்லுறன்.

என்னெண்டா யாழ். குடாவையும் வன்னியேமத் துண்டாடுற இடமிருக்கெல்லை! பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் எழதுமட்டு வாழ். பளை, இயக்கச்சி இதுகளிலை விபத்துக்களில் கடுமையாப் பாதிக்கிறவை துண்டாத் தப்பமாட்டினம் பாருங்கோ!

ஏனெண்டா அப்பிரதேசங்களில் விபத்துக்கு உள்ளாகிறவையை யாழ். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு வரமுடியா தாம். கிளிநொச்சி ஆசுப்பத்திரிக்குத்தான் கொண்டுபோக வேண்டுமெண்ட சட்டத்தை பொலிசாரோ. சுகாதார அமைச்சோ ஆர் போட்டேண்டு தெரியேல்லை வைச்சிருக்காம்.

அங்கை கொண்டு போய் அவையள் தான் திரும்ப யாழ்ப் பாண ஆசுப்பத்திரிக்கு அனுப்பிவைக்க வேணுமாம். அங்குமிங்குமாக இழுபறிப்பட அதுக்கிடேல்லை சீவன் போயிடும். முதல்லையே யாழ. ஆசுப்பத்திரிக்குக் கொண்டு வந்தால் படுகாயமடைந்தவரைத் தப்ப வைச்சிருக்கலாம்.

இந்தக் கோதாரிச் சட்டமொண்டாலை அநியாயமா ஒரு சீவனே இதுவரைக்கும் பறிக்கப்பட்டிருக்கு சொல்லுங்க பாப்பம்? அதுதானே ஆசுப்பத்திரி நிர்வாகங்கள் உயிர்களைக் காப்பாத்த இருக்கோ. சொல்லுறதுக்கு இருக்கொண்டு அந்த ஆசுப்பத்திரி உத்தியோகத்தரே கேள்வி எழுப்பினார்.

முட்டாள் மலத்தை உளக்கினால் ஒன்பது இடங்களில் பிரட்டுவானெண்டு சும்மாவே அந்த நாளேலை சொல்லி வைச்சவை? ஆக இது மட்டுமே நமக்குது அரச நிர்வாகங்களிலை? எல்லோரும் பரமாத்த குருவா இருப்பினம் அல்லாட்டி சீடர்களைப் போல நமக்கென்ன வந்துதெண்ட பிளான்தான்.

உந்தக்கட்டுப்பாட்டைச்செய்யும் சட்டத்தை அகற்றினா உயிர்களெல்லாம் புளைச்சிடுமெண்டுதானை வைச்சுக் கொண்டிருக்கினம்? உவேன்ரை பிளானொண்டுமா விளங்கேல்லைச் சுன்னாகத்திலைக் கழிவொயிலையும், யாழ்ப்பாணததிலை மலக்கழிவேம் தண்ணீல கலக்கச் செய்யுறது மூண் ஆட்களைக் கொல்லத்தானை இல்லையே பின்னை விளங்காமல் கேக்கிறன் சொல்லுங்கவன் பாப்பம்.

# போதை வர்த்தகம் கிழக்கில் அமோகம்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப் பொலிஸ் பிரிவில் உள்ள முதியோர் இல்ல வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்றுக் காலை கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அதனை தம் வசம் வைத்திருந்த குடும்பஸ்தரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி றிஸ்வி நகர், முதியோர் இல்ல வீதியைச் சேர்ந்த அலியார் தாஜுதீன் என்ற 47 வயதான குடும்பஸ்தரிடமிருந்து இலங்கை நாணயப்படி சுமார் 30 ஆயிரம் ரூபாய் பெறுமதி மதிக்கத்தக்க 150 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்த தகவலின்படி குறித்த வீட்டை திடீர் சோதனையிட்ட போதைவஸ்துத் தடுப்பு புலனாய்வுப் பொலிஸார் மேற்படி அளவுடைய கஞ்சாவையும் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதி மன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலதிக விசாரணைகள் இடம் பெறுகின்றன.

புதிய காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதியைச் சேர்ந்த ஆதம்லெப்பை முஹம்மத் ஆஷிக என்ற 27 வயதான இளைஞனிடமிருந்து இலங்கை நாணயப்படி சுமார் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 180 கிராம் கேரளக் கஞ்சா, கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# புதிய வகை கொக்குகள்

## மன்னாரில் அதிசயம்



மன்னார் பிரதான பாலம் முதல் தள்ளாடி கடற்கரையோரம் வரையான பகுதிகளில் புதியவகையான கொக்குகளின் வருகை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு அமைய வெளிநாட்டு பறவைகள் கடல் கடந்து மன்னார் தீவுப்பகுதிக்குள் வருடந்தோறும் வருவது வழமை.

அந்த் வகையில் புதிய வகை கொக்குகள் தற்போது மன்னார் கடற்கரை பகுதிக்கு வருகை தர ஆரம்பித்துள்ள நிலையில், வருகை தரும் கொக்குகள் மன்னார் தீவுப்பகுதியில் உள்ள கொக்குகளுடன் இணைந்து கொள்ளுகின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

(01). தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூட்டினுள் எழுதுக

01. மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் ☐
02. நூல்களில் இருந்து தகவல்களைப் பெற முடியாது ☐
03. இலங்கையில் பல்வேறு தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன ☐
04. இலங்கையில் பல தினசரி சஞ்சிகைகள் வெளிவருகின்றன ☐
05. இலங்கையில் நவீன தொலைபேசி வசதிகள் காணப்படுகின்றன ☐

(02). பொருத்தமான சொற்களை இணைக்குக

| | | |
|---|---|---|
| 06. | வீரகேசரி | சஞ்சிகை |
| 07. | குமுதம் | முத்திரை |
| 08. | புதுவருடம் | தினசரிப்பத்திரிகை |
| 09. | கடிதம் | ஒலிப்பதிவு செய்தல் |
| 10. | ஒலிப்பதிவுக்கருவி | வாழ்த்துமடல் |

(03). வினாக்களுக்கு விடை தருக

11. இலங்கையில் காணப்படும் தகவல் தொடர்பு சாதனங்கள் நான்கு தருக
.............................................................................

12. இலங்கையில் விற்பனையாகும் சஞ்சிகைகள் நான்கின் பெயர்களைத் தருக
.............................................................................

13. இலங்கையில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் மூன்றின் பெயர்களைத் தருக
.............................................................................

14. வாழ்த்து மடல்கள் அனுப்பப்படும் நான்கு சந்தர்ப்பங்கள் தருக
.............................................................................

15. பத்திரிகைகளில் வெளிவரும் விடயங்கள் சில கூறுக
.............................................................................

(04). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக

| வெளிநாடுகளுடனும் | புத்தகங்கள் | தபாற்கந்தோருக்குச் | தகவல்களைப் | கடிதம் |
|---|---|---|---|---|

16. நூலகத்தில் ................................................ வாசிக்க முடியும்
17. கையடக்கத் தொலைபேசிகளால் ................................................ தொடர்புகொள்ள முடியும்
18. தந்தி அடிப்பதற்கு ................................................ செல்லல் வேண்டும்
19. மின்னஞ்சல் மூலம் ................................................ ஒன்றை அனுப்பலாம்
20. இணையம் மூலம் பல ................................................ பெறலாம்

(09). வினாக்களுக்கு விடை எழுதுக

56. பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுவோர் யார்?
.............................................................................

57. உமது பாடசாலையில் புதியகட்டிடம் அமைப்பதற்குரிய காரணங்கள் 2 தருக?
.............................................................................

58. பாடசாலையின் அபிவிருத்திக்கு மாணவர்களாகிய உங்களின் பங்கு என்ன?
.............................................................................

59. உமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக
.............................................................................

60. உமது பாடசாலை அமைந்துள்ள இடத்தையும் உமது பாடசாலை கட்டப்பட்டுள்ள ஆண்டையும் தருக?
.............................................................................

61. உமது பாடசாலையின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் விபரிக்குக
.............................................................................

62. உமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய இரு அதிபர்களின் பெயர்களைத் தருக
.............................................................................

63. உமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைத் தருக
.............................................................................

64. உமது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் வீதிகளின் பெயர்களைத் தருக
.............................................................................

(10). சரியான விடையின் கீழ் கோடிடுக.

65. சரியான கூற்றைத் தெரிவு செய்க
(1). நாம் பாடசாலைக்குச் செல்லும் போது பாதையின் வலது புறமாகச் செல்லுதல் வேண்டும்
(2). பாடசாலைக்கு வரும்போது கூட்டமாக வருதல் வேண்டும்.
(3). குப்பைகூழங்களை வீதி ஓரத்தில் போடுதல் வேண்டும்
(4). உடைகளைச் சுத்தமாகப் பேணுதல் வேண்டும்

66. உடைகளைக் கழுவப் பயன்படும் ஒருபொருள் எது?
(1). எரிசோடா
(2). சலவைத்தூள்
(3). விம்சோப்
(4). குளோரின்

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 01. i  02. iii  03. iii  04. i  05. iii  (02). 06. ii  07. iii
(03). 08. iii  09. iii  (04). 10. வருவார்  11. வாழ்ந்தனர்  12. பாவிப்பார்கள்
13. வேண்டும்  14. ஆண்டான்  (05). 15. ii  16. i  (06). 17. 3  18. 5  19. 1  20. 2  21. 4
(07). 22. ii  23. iii  (08). 24. சித்திரை  25. டெங்கு  26. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
27. 365நாட்கள்  28. நிலவு, நட்சத்திரம்  29. 365நாட்கள்  30. 1நாள்  (09). 31. அழகானவை
32. விரைவில் உடையும்  (10). 33. i  34. iii  35. iii  (11). 36. ii
37. ii  38. iii  39. i  40. iii  (12). 41. iii  42. ii  43. i
(13). 44. ii  45. iii  46. iii  47. i  48. ii  49. iii  50. ii
(14). 51. ஒட்டகச்சிவிங்கி  52. இந்தியா  53. இலங்கை  54. கணவாய்
55. அலெக்ஸாண்டர் கிரகம்பெல்

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



(05). சரியான விடையின் கீழ் கோடிடுக

21. இல்லவிளையாட்டுப் போட்டி தொடர்பான சரியான கூற்று எது?
(1). ஒரே பாடசாலையில் நடைபெறும்
(2). இரு பாடசாலைகளுக்கிடையே நடைபெறும்
(3). பல பாடசாலைகளுக்கிடையே நடைபெறும்
(4). மேற்கூறப்பட்ட மூன்றும் பிழையானவை

22. பண்டைய விளையாட்டுக்களில் ஒன்றாகக் கருதப்படும் ஒரு விளையாட்டு எது?
(1). கிரிக்கெட் (2). கால்பந்து (3). டெனிஸ் (4). கிளித்தட்டு

23. உமது பாடசாலை யாரின் கீழ் இயங்குகின்றது?
(1). ஆசிரியர் (2). அதிபர் (3). பெற்றோர் (4). மாணவர்கள்

24. பின்வருவனவற்றுள் எது ஒரு பாடசாலையில் காணப்படமாட்டாது,




(1)  (2)  (3)  (4) 

25. வைத்தியசாலையில் காணப்படும் ஒரு கருவி அல்லாதது எது?
(1). உடல் ஒலிபெருக்கி (2). X கதிர் கருவி
(3). ECG கருவி (4). ஒலிபெருக்கி

26. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோர் யார்?
(1). பொலிஸார் (2). வைத்தியர் (3). நகரசபையினர் (4). பிரதேசசபையினர்

27. கிராம மக்களின் பிரதான தொழிலாக இருக்கக்கூடிய எது?
(1). விவசாயம் (2) வியாபாரம் (3) வைத்தியம் (4). அரசஉத்தியோகம்

28. நகரம் ஒன்றில் அவதானிக்க முடியாதது எது?

(1)  (2)  (3)  (4) 

29. நகர்ப்புற மக்களின் ஒரு தொழிலாக இருக்கக்கூடியது எது?
(1) விவசாயம் (2). மீன்பிடி (3). குடிசைக்கைத்தொழில் (4). வியாபாரம்

30. கிராமத்தில் கிடைக்கக்கூடியது?
(1). சுத்தமான இயற்கைச் சூழல் (2). சுத்தமான செயற்கைச்சூழல்
(3). சிறந்த போக்குவரத்து (4). சிறந்த மருத்துவ வசதி

31. கிராமிய மக்களின் பொழுதுபோக்காகக் கருதப்படுபவைகளில் ஒன்று எது?
(1). கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடல் (2). சினிமா பார்த்தல்
(3). மிருகக்காட்சிச்சாலைக்குச் செல்லுதல் (4). களியாட்டங்களில் ஈடுபடல்

32. கிராமத்துக் கட்டடங்கள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க
(1). சிறிய வீடுகள் (2). வீடுகள் தூரத்தில் அமைந்திருக்கும்
(3). வீட்டைச் சூழ முட்கம்பி வேலி காணப்படல் (4). மேற்கூறிய மூன்றும் சரி

33. பெற்றோர், அதிபர், ஆசிரியர் சேர்ந்து உருவாக்கும் சங்கத்தின் பெயர் என்ன?
(1). பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (2). விவசாய அபிவிருத்திச்சங்கம்
(3). விளையாட்டு அபிவிருத்திச்சங்கம் (4). கல்வி அபிவிருத்திச்சங்கம்

34. பாடசாலை மாணவர்களுக்கு கற்பிப்போர் யார்?
(1). அதிபர் (2). ஆசிரியர்
(3). மாணவத்தலைவர் (4). பெற்றோர்



35. பாடசாலையின் அபிவிருத்தியில் மாணவர்களின் ஒரு பங்கு அல்லாதது எது?
(1). பூங்கா அமைத்தல் (2). தோட்டம் அமைத்தல்
(3). வகுப்பறையைக் கூட்டுதல் (4). கதிரையை உடைத்தல்

36. மாணவர்களின் கல்விக்கு உதவும் ஒரு அமைப்பு எது?
(1). யுனிசெப்அமைப்பு (2). ஐக்கிய நாடுகள் சபை
(3). செஞ்சிலுவைச்சங்கம் (4). மனிதஉரிமைகள் சபை

37. பின்வருவனவற்றுள் எது சமயம் தொடர்பான மன்றம் அல்லாதது?
(1). இந்துமன்றம் (2). விஞ்ஞானமன்றம்
(3). இஸ்லாம்மன்றம் (4). கிறிஸ்தவமன்றம்

38. இலங்கையிலுள்ள பாடசாலைகள் தொடர்பான சரியான கூற்று எது?
(1). இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவை தனியார் பாடசாலைகள்
(2). இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவை அரசாங்க பாடசாலைகள்
(3). இலங்கையிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் சர்வதேச பாடசாலைகள்
(4). இலங்கையிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் மும்மொழியும் கற்பிக்கப்படுகின்றன

39. பாடசாலையில் நடைபெறும் ஒரு போட்டி அல்லாதது எது?
(1). இலக்கியப்போட்டி (2). விளையாட்டுப்போட்டி
(3). கவிதைப்போட்டி (4). அபிவிருத்திப்போட்டி

40. ஒரு மாணவனின் உடல் ஆரோக்கியத்திற்கு என்ன செய்தல் வேண்டும்
(1). உடற்பயிற்சி செய்தல் வேண்டும் (2). அமைதியாகப் படித்தல் வேண்டும்
(3). நன்றாக உணவு உண்ணுதல் வேண்டும் (4). நன்றாகப் படித்தல் வேண்டும்

(06). தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூட்டினுள் எழுதுக

41. பாடசாலையின் அபிவிருத்திக்கு பெற்றோர்கள் உதவுவதில்லை ☐
42. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு யுனிசெப் அமைப்பு உதவுகின்றது ☐
43. பாடசாலை விழாக்களில் மாணவர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றுவர் ☐
44. பாடசாலையின் அபிவிருத்தியில் மாணவர்களின் பங்களிப்பு அவசியமில்லை ☐
45. பாடசாலைக் கட்டிட அபிவிருத்திக்கு அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவுகின்றன ☐

(07). பொருத்தமான சொற்களை தொடர்புபடுத்துக

| | | |
|---|---|---|
| 46. ஆசிரியர் | (arrow) | பூங்காவை அமைத்தல் |
| 47. மாணவர்கள் | | பாடசாலை நிர்வாகம் |
| 48. அதிபர் | | கற்பித்தல் |
| 49. பழைய மாணவர்கள் | | மாணவர்கள் |
| 50. வகுப்பறைச்சுத்தம் | | பாடசாலை அபிவிருத்தி |

(08). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக

| | | | | |
|---|---|---|---|---|
| சுத்தமாக | பூங்கா | மாணவர்களும் | பாதுகாக்க | பங்குபற்றுதல் |

51. மாணவர்கள் பாடசாலையில் அழகிய ............................................ ஒன்றை அமைத்துள்ளனர்
52. மாணவர்கள் தினமும் வகுப்பறையைச் ............................................ வைத்திருத்தல் வேண்டும்
53. பாடசாலையின் அபிருத்திக்கு ............................................ உதவ வேண்டும்
54. விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் ............................................ வேண்டும்
55. பாடசாலைச் சொத்துக்களைப் ............................................ வேண்டும்

# பிளீஸ்... பிளீஸ்... வாசிக்க வேண்டாம்

மனிதர்களால் பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகின்ற கழிவுகள் மனித சமூகத்தையே அழிக்கும் அளவுக்கு பலவித கழிவுகள் இன்று உருவாகி வருகின்றன. உருவாக்கப்பட்டும் 'வருகின்றன.

இன்று ஒருபுறத்தில் குடிநீரில் கழிவு ஒயில் விவகாரம் வலிகாமத்தை ஆட்டிப் படைக்கிறது. மறுபுறத்தில் மலக்கழிவு, ஆஸ்பத் திரிக்கழிவு, கால்நடை கழிவு, திண்மக் கழிவு, குசினிக்கழிவு என இன்னொரு புறத்தில் ஆட்டிப்படைக்கிறது. அழிக்க முற்படுகிறது.

இவ்விரண்டு விவகாரங்களும் வடமாகாண சபைக்கு உட்பட்ட உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற விடயங்களாகவும், பிரச்சினைகளாகவும் தீர்வுகாணப்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளன.

இன்று குடிநீரில் (சுன்னாகம்) கழிவு ஒயில் விவகாரம் ஆனது நிபுணத்துவ அறிக்கை, ராடர் அறிக்கை, சர்வதேச ஆய்வு, நீர்வழங்கல் சபையின் அறிக்கை, அரச அதிபர் அறிக்கை, அமைச்சர்களின் அறிக்கை, மாகாண சபை உறுப்பினர்களின் அறிக்கை, வடக்கு முதல்வர் க.வி.விக்கினேஸ்வரனின் அறிக்கை எனப் பல வடிவங்களை எடுத்து நிற்கிறது.

இதற்கு மேலாக இன்று வைத்தியர்கள் அணி இந்த அறிக்கைகளைத் தூக்கி எறிந்து விட்டு குடிதண்ணீர் குடிக்க முடியுமா? குடிக்க முடியாதா? என முதல்வர் மட்டும் கூறினால் போதும் நாம் குடிப்பதற்குத் தயாராக உள்ளோம் எனக் கூறுகிறார்கள்.

இன்று எமது சமூகத்தில் கொடிய போரின் பின்னர் மீளக்கட்டமைக்கப்பட்டு மக்கள் தமது நிம்மதியான வாழ்க்கையை இந்தப் பணவீக்க காலத்திலும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

ஏழைமுதல் நடுத்தர பணக்கார வர்க்கத்தினரும் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையால் போத்தல் (mineral) குடிநீரையே பருகுகின்றனர்.

மனிதன் சிறிது காலமாகவேனும் இந்த காலத்தில் வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இந்நிலையில் காசு கொடுத்து பருகுகின்றார்கள். ஆனால் மகான்கள் ஊடாக அறிக்கையிட்டும், பலவித நலன்களை அனுபவிப்பதற்குரிய காலமல்ல இது என்பதைப் புரியவேண்டும். இது ஒருபுறம் இருக்க!

இன்று கல்லுண்டாய் மானிப்பாய் பிரதேச சபையின் நிர்வாக பரப்பிற்குள் உள்ள இடம். இந்த இடத்தை யாழ். மாநகர சபை ஆக்கிரமித்து மாதாந்தம் பல மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டும்

## இது கழிவு அறுவடை

அளவுக்கு வருமானத்தை தேடி மக்கள் வாழும் பிரதேசமான நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அராலிக்கு அருகில் கழிவுகளைக் கொட்டி நெருப்பை வைத்து விடுகின்றனர்.

இங்கு மனிதன் திண்மக் கழிவுகளால் அழிக்கப்படுகின்றான் என்ற "வாசகமிட்டு" நடாத்தப்பட்ட மக்கள் சந்திப் போராட்டத்தின் பின் மலக்கழிவு ஆஸ்பத்திரி கழிவு கொட்டப்படமாட்டாது என ஒப்பந்தமிடப்பட்டது.

இடைநிறுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. மேலும் ஓரிரு மாதங்களின் பின்னர் எவ்வகையான மாநகர கழிவுகளும் வலி.தெற்மேற்கு கல்லுண்டாயில் கொட்டப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றையும் மீறி மீண்டும் வலி.தென்மேற்கு மக்களின் உயிர்களை பலியெடுப்போம் என்ற தோரணையில் பொறிமுறையற்று கழிவுகள் கொட்டப்பட்டு தீயூட்டப்படுவதால் வலி.தென் மேற்கு மக்களின் ஒரு பகுதியினர் கிராமங்களை விட்டு இடம்பெயர (நகர) வேண்டிய நிலைக்கு வடமாகாண சபை நிர்வாகம் தலைதூக்கி நிற்கிறது,

யாழ். மாநகர சபைக்கு அரியாலை பொம்மைவெளி மற்றும் இதர பிரதேசங்கள் கழிவுக்காக இனம் காணப்பட்ட பிரதேசங்களாக உள்ளன.

இதுவரையில் கழிவுகளை மீள் சுழற்சிக்கான பொறிமுறை குறித்து ஆராயப்படவில்லை. இப்பொறிகளை வழங்குவதற்காக ஐ.நா. UNOPS (யுனொப்ஸ்) நிறுவனம் காத்திருப்பதாக தெரிவித்த போதும் இதுவரை யாரும் தம்மை அணுகவில்லையென தெரிவிக்கின்றனர்.

யாழ். மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏன் இதுவரை ஆபத்தான கல்லுண்டாய் கழிவு விடயத்தை தடுத்து நிறுத்தவில்லை. மக்களால் நியமிக்கப்பட்ட சூழலியல் அமைச்சர்கள் மக்களை எவ்வாறு பாதுகாக்கவுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க மானிப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எது எப்படியிருப்பினும் யாழ். மாநகர சபை கழிவுகளை 100 முதல் 120 டிராக்டர் 'வரையிலான யாழ்ப்பாண கழிவுகளை வலி.தென்மேற்கில் கொட்டுவது.' எரிப்பது முறையற்ற முரண்பாடான செயல் என்பது வெளிப்படையான உண்மை.

யாழ். மாநகரசபை வருமானம் ஈட்டுவதும், ஆபத்தான கழிவுகளை கல்லுண்டாயில் கொட்டுவதனை வடக்கு அரசு



கல்லுண்டாய் திண்ம கழிவு சுற்று சூழல் சபை ஏன் மௌனித்துவிட்டது?

மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஏன் பிறிதொரு வழக்கை தாக்கல் செய் யாமல் உள்ளனர் என்பது மக்கள் முன்னுள்ள கேள்வி களாகும்.

வடக்கு சுகா தார அமைச்சர் - வடக்கு அதிகாரிகள் தடுத்து உடன் இடைநிறுத்த வேண்டும். இந்த நிலை தொடர்ந்தால் மக்கள் மீண்டும் கிளர்ந்து. எழுந்தால் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும் என்பதனை கவலையுடன் தெரிவிக்கிறோம்.

- அஸ்வினி - ஊரிக்காடு

# நீர்மூழ்கிகளுக்கு கதவடைப்பு விவகாரம் இப்போது பூதாகாரம்

## விடாப்பிடி நிலையில் சீனா

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே இராணுவ உறவை மேம்படுத்தும் பொருட்டு நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் இலங்கை ராணுவம் இடையேயான இந்த நல்லுறவை மேம்படுத்த நீண்ட நேரக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. பயிற்சிகள், ஒத்துழைப்புக்கள் தொடர்பிலான விவாதமும், ஆராய்வும் இதன்போது இடம்பெற்றுள்ளதாகத் கூறப்பட்டது.

இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் இலங்கை இராணுவத் தளபதிக்கும் இடையிலேயே இநதப் பேச்சு இடம்பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சீன நீர்மூழ்கிக் கப்பல்களுக்குக் கதவடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை இராணுவ தலைமையக ஆவணம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## இந்திய மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல்

இலங்கை மீனவர்கள் மேற்கொண்ட தாக்குதலினால் இந்திய மீனவர்கள் எழுவர் காயமடைந்துள்ளனர்.

நடுக்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீனவர்களைத் தாக்கியதோடு அவர்களது உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிககப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் பயணித்த படகிற்குள் சென்று இலங்கை மீனவர்கள் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களின் தாக்குதல்களில் காயமடைந்த இந்திய மீனவர்கள் எழுவரும் கரைக்கு திரும்பியுள்ளதுடன், காயமடைந்தவர்கள் நாகை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலுவடையும் வர்த்தக உறவு ஜப்பானுடன் புதிய ஒப்பந்தம்

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில், இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த ஆண்டில் குறித்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளதாக இலங்கை ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்பு அமைப்பு அறிவித்துள்ளது. இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபிதோ ஹோபோ தலைமையில் அண்மையில் இலங்கை - ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போதே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

# 19 ஆம் திருத்தம் அனைத்து கட்சிகளும் இப்போது ஒரே கோட்டில்

உயர்நீதிமன்றம் அனுமதியளித்த 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரிவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த கட்சித் தலைவர்களுடனான விஷேட கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் குறித்த விவாதத்தை நடத்த அணைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# இரணைதீவில் மீள்குடியமர்வு அரச அதிபரிடம் கோரிக்கை

கிளிநொச்சி இரணைதீவு பகுதியைச் சேர்ந்த மக்கள் இரணைமாதா நகரில் வசித்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த நிலமான இரணைதீவுப் பகுதியில் தம்மை மீள்குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மகஜர் ஒன்றை கையளித்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் இணைதீவு கிராமத்தில் சுமார் 183 குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டில் அந்தப் பகுதியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கை காரணமாக இரணைதீவு கிராம மக்கள் தமது சொந்த ஊரைவிட்டு இடம்பெயர்ந்தனர்.

தமது மீன்பிடி உபகரணங்களான வலைகள், படகுகள் முதல் கால்நடைகள் வரை அனைத்தையும் இழந்து இந்த மக்கள் அன்று அகதிகளாக்கப்பட்டதாக கூறுகின்றனர்.

அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் முழங்காவில் இரணைமாதா நகரில் தஞ்சமடைந்த நிலையில் கடந்த 23 வருடங்களாக தமது சொந்த நிலத்திற்குத் திரும்பாத நிலையில் வாழ்கின்றனர்.

தற்போது 314 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இரணைமாதா நகரில் சில குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டபோதும் அவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுக்க முடியாத் நிலையில் உள்ளனர்.

இரணைதீவு மக்களின் வாழ்வாதாரத் தெழிலான மீன்பிடித் தொழிலை முன்னெடுக்க தம்மை மீள்குடியேற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது சொந்த ஊருக்கு என்றாவது ஒருநாள் திரும்புவோம் என்ற நம்பிக்கையிலேயே இரணைமாதா நகரில் வாழ்ந்து வந்ததாக இரணைதீவு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தமது கோரிக்கைகளை அண்மையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தெரியப்படுத்தியதாக இரணைதீவு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்போது தமது கிராமத்தை இராணுவமே பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கும் இரணைதீவு மக்கள் தாம் அங்கு காலம் காலமாக வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்கள் தம்மிடமும் இரணைதீவிலும் உள்ளதெனவும் கூறுகின்றனர்.

# தகுதியற்ற அகதிகளை வெளியேற்ற ஜேர்மன் அரசு அதிரடி முடிவு

ஜேர்மனியில் தகுதியற்ற அகதிகளை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

நகரில், கடந்த வெள்ளியன்று Christian Democrat (CDU) கட்சியை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் Christian Democrat (CDU) கட்சியினர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த உள்துறை பாதுகாப்பு அமைச்சரான Thomas de Maizière தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரிப்பதுடன் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றப்படுவது குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

ஜேர்மனி குடிமக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு எதிராக உள்ள அகதிகளின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதை விட, அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது அவசியம் என Thomas de Maizière தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் செய்தி தொடர்பாளரான Steffen Seibert கூறுகையில், எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி, ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், துணை அதிபர் சிக்மர் கேப்ரியல் உள்ளிட்ட தலைவர்கள், இது குறித்து முக்கிய முடிவு எடுக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் அகதிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அரசியல் தலைவர்களுக்கு அரசிடமிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை என்ற அதிருப்தியும் நிலவி வருகிறது.


மேலும், ஐரோப்பிய நாடுகளிலேயே ஜேர்மனியில் மட்டும் தான் அகதிகள் குடியேறுவது அதிகளவில் அதிகரித்து வருவதால், அவர்களுக்கு தற்காலிகமாக இருப்பிட வசதிகளை ஏற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஜேர்மனியில் தஞ்சம் கோரியவர்களின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,27,023 ஆக இருநதது. இந்த எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு 2,02,834 ஆக அதிகரித்துள்ளது.

மேலும்,இது 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் 3,00,000 ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக இடம் பெயர்வு மற்றும் அகதிகளுக்கான (Migration and Refugees (BAMF) அலுவலகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# 12 கிறிஸ்தவர்கள் கொலை 15 முஸ்லிம்கள் கைது



லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளை ஏற்றி வந்த படகு இத்தாலி அருகே மத்திய தரை கடலில் மூழ்கியதில் 400 பேர் பலியாகினர். 41 பேர் மாயமாகினர்.

அதைத் தொடர்ந்து படகு மூழ்கிய இடத்தை விமானம் கண்டு பிடித்தது. அங்கு கடற்படை கப்பல் அனுப்பப்பட்டது. அதையடுத்து அங்கு கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 4 பேரை பொலிஸார் உயிருடன் மீட்டனர்.

அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடாத்திய போது அவர்கள் நைஜீரியா, கானா மற்றும் நைஜர் நாட்டைச் சேர்ந்தவர்கள். மேலும் கப்பல் மூழ்கியது குறித்து அவர்களிடம் இத்தாலி பொலிஸார் விசாரித்தனர்.

விசாரணையில், படகில் வந்த முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ அகதிகளிடையே மோதல் ஏற்பட்டது என தெரிவித்தனர். ஒரு கட்டத்தில் மோதல் உச்சக் கட்டத்தை அடைந்ததும் கை கலப்பு ஏற்பட்டது.

அப்போது, 12 கிறிஸ்தவர்கள் கடலில் வீசி கொல்லப்பட்டனர். அதனால் கப்பல் நிலை தடுமாறி கடலில் மூழ்கியது என தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து 15 முஸ்லிம் அகதிகளை இத்தாலி பொலிஸார் கைது செய்தனர். கடலில் வீசி கொல்லப்பட்டவர்கள் நைஜீரியா மற்றும் கானா நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர்.

# படம் வரையும் ஆடு



அமெரிக்காவின் வின்சென்ட் வான்கோ என்ற புகழ்பெற்ற ஓவியனைப் போலவே, ஒரு ஆடு நவீன ஓவியங்களை வரைந்து தள்ளுகிறது. இந்த ஆட்டின் பெயர் வின்சென்ட் வான்கோட். அமெரிக்காவின், நியு மெக்சிகோ நகரில் உள்ள அல்புகுர்க் தாவரவியல் பூங்கா வில் இருக்கும் இதற்கு, அந்தப் பூங்காவின் பணியாளர், கிரிஸ்டன் ரைட் சில மாதங்கள் செலவிட்டு படம் வரையக் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

படம் வரைவதையும், வண்ணங்கள் அடிப்பதையும், கற்றுக் கொண்ட வான்கோட், இப்போது, அற்புதமாக படங்கள் வரைகிறது. அது வரையும் படங்கள், அழகாகவும் வித்தியாசமாகவும், இருப்பதால் பலர், அவற்றை விலைக்கு வாங்க முன் வருகின்றனர். ஆடு வரையும் படங்களுக்கு, சர்வதேச ஓவியச் சந்தையிலும் படு கிராக்கி, இருக்கிறது. அந்த ஓவியங்கள், 40 டொலரில் துவங்கி, 2,000 டொலர்கள் வரைக்கும் விலை போகிறது. ஆடு வரைந்த படம் ஒன்றை, 2,000 டொலருக்கு வாங்கிய ஒரு பெண், "என்னால் நம்பவே முடியவில்லை. இந்தப் படத்தை, ஓவியக் கலைஞர் வின்சென்ட் வான்கோவே வரைந்த மாதிரித்தான் இருக்கிறது. "ஆடு, பயன்படுத்தும் வண்ணங்கள் வான்கோவை ஞாபகப் படுத்துகின்றன, என, வியந்து கூறுகிறார்.

# வெளிநாட்டவருக்கு எதிராக தென்னாபிரிக்காவில் கலவரம் — 6 பேர் பலி

தென்னாபிரிக்காவில் குடியிருக்கும் வெளிநாட்டினருக்கு எதிராக மூண்ட கல்வரத்தில் 6 பேர் பலியாகினர்.

தென் தென்னாபிரிக்காவில் ஏராளமான வெளிநாட்டினர் குடியுரிமை பெற்று அங்கேயே நிரந்தரமாக தங்கியுள்ளனர். இதனால் தங்களது வேலை வாய்ப்பும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக தென் தென்னாபிரிக்க மக்களில் சிலர் கருதுகின்றனர்.

எனவே, அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டினருக்கு எதிராகவும், அவர்கள் வெளியேற வலியுறுத்தியும் துறைமுக நகரமான டர்பனில் சில வாரங்களுக்கு முன்பு கலவரம் மூண்டது.

தற்போது அக்கலவரம் படிப்படியாக தலைநகர் ஜோகனஸ் பேர்க் நகருக்கும் பரவியது. கலவரத்தில் ஈடுபட்டவர்கள் இரவோடு இரவாக கடைகளை உடைத்து பொருட்களை கொள்ளையடித்தனர்.

வீடுகளில் புகுந்து பொருட்களை சூறையாடினர். ஜோகனஸ்பேர்க்கை ஒட்டியுள்ள அலெக்சாண்ட்ரா டவுன் ஷிப்பில் வன்முறை தலை விரித்தாடுகிறது. வீதிகளில் டயர்களை போட்டுக்கொளுத்தி போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தியுள்ளனர்.

வன்முறையை ஒடுக்க போராட்டக் காரர்கள மீது பொலிஸார் இறப்பர் குண்டுகளை வீசி விரட்டியடித்து வருகின்றனர். வன்முறை சம்பவத்துக்கு இதுவரை 6 பேர் பலியாகி உள்ளனர்.

வெளிநாட்டினரை குறி வைத்து தாக்குதல் நடைபெறுவதால் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டினர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு மையங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தற்போது நிலைமை மோசமடைந்து வருவதை தொடர்ந்து அண்டை நாடுகளான ஜிம்பாப்வே, மாலவி, மொசாம்பியா உள்ளிட்ட நாடுகள் தங்கள் நாட்டு மக்களை வெளியேறும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

தென்னாபிரிக்கா அதிபர் ஜேக்கப் "மா ஆபிரிக்கா மற்றும் ஆசிய தலைவர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள இந்தோனேசியா செல்வதாக இருந்தார். தற்போது கலவரம் தீவிரம் அடைந்துள்ளதால் தனது இந்தோனேசிய பயணத்தை இரத்து செய்து விட்டார்.

தாக்குதலுக்கு அஞ்சி டர்பன் பாதுகாப்பு முகாம்களில் தங்கியிருக்கும் வெளிநாட்டினரை சந்திக்க அதிபர் "மா திட்டமிட்டுள்ளார். மேலும் நாட்டு மக்களை அமைதி காக்கும்படியும், தங்கள் நாட்டில் வாழும் மககளை சகோதர, சகோதரிகளாக பாவித்து அன்பும், அமைதியையும் பேணி காக்கும் படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# நைஜீரியாவில் புதுவித நோய் 18 பேர் பலி



ஏற்கனவே எபோலா நோயின் பிடியில் சிக்கித்தவித்துக்கொண்டிருக்கும் ஆபிரிக்காவில் இப்போது புதுவகை நோய் ஒன்று மக்களை தாக்க ஆரம்பித்திருக்கிறது. நைஜீரியாவின் தெற்கு பகுதியில் இருக்கும் ஒன்டோ மாநிலத்தில் உள்ள ஒடே-இரலே நகரத்தில் இந்த நோய் தாக்கி இதுவரை 18 பேர் இறந்திருப்பதாக நைஜீரிய அரச அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

முதன் முதலில் ஏப்ரல் 13 இலிருந்து 15 ஆம் திகதிக்குள் இந்த நோய் தாக்கியது கண்டறியப்பட்டது என்றும், இந்த நோய் தாக்கியவர்களுக்கு கண் பார்வை மங்கி, தலைவலி வந்து, சுயநினைவை இழந்து, 24 மணி நேரத்திற்குள் இறந்து விடுவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மர்ம நோய் நைஜீரியாவை தாக்க துவங்கியுள்ளதை அடுத்து, அங்கு உலக சுகாதார அதிகாரிகளும் உள்ளூர் சுகாதார அதிகாரிகளும் முகாமிட்டு நோய் கிருமியை கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

தாக்கியது எபோலா நோய் கிருமி அல்ல என்றும் இது ஏதோ புது நோய் என்றும், .இந்த நோய் கிருமி முதலில் மக்களின் மத்திய நரம்பு மண்டலத்தை தாக்குகிறது என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். தொடர்ந்து ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

# 200 தமிழ் பெண் பொலிஸார் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவை

## மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 5 பொலிஸ் நிலையங்களுக்கும் 200 தமிழ் பெண் பொலிஸார் தேவையாகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்மன் மகேந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி, நாச்சிக்குடா, முழங்காவில் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் 5 பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ளதுடன், அவற்றின் கீழ் பொலிஸ் காவலரண்கள் பலவும் காணப்படுகின்றன.

இந்த நிலையில், பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளனர்.

இதனால் பெண்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன.

இதனை நிவர்த்தி செய்ய 200 பெண் தமிழ் பொலிஸார் தேவை என அவர் மேலும் கூறினார்.

# உண்டியல் உடைத்தவர் பொதுமக்களிடம் சிக்கினார்

யாழ்.சில்லாலை கதிரமாதா தேவாலயத்தின் காணிக்கை உண்டியலை உடைத்து திருட முற்பட்ட சந்தேகநபரை அப்பகுதி பொதுமக்கள் பிடித்து நேற்று தங்களிடம் ஒப்படைத்ததாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

தேவாலயத்தில் எவரும் இல்லாத சமயம் பார்த்து, உள்நுழைந்து அங்கிருந்த உண்டியலை உடைக்க முற்பட்டபோது, சத்தம் கேட்டு அருகில் நின்றிருந்த இளைஞர்கள் தேவாலயத்துக்குள் சென்றபோது, சந்தேக நபர் தப்பித்து ஓடமுயன்றுள்ளார்.

சந்தேகநபரை மடக்கிப் பிடித்த இளைஞர்கள், பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# கட்டாக்காலி மாடுகளை பிடித்து ஏலத்தில் விடுவதற்கு தீர்மானம்

(நவாலி)

நவாலி தெற்கில் கட்டாக்காலியாகத் திரியும் அனைத்து மாடுகளையும் பிடித்து ஏலத்தில் விட மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

நவாலி தெற்கில் பொது மக்கள் வாழும் இடங்களிலும், பொது இடங்களிலும் கரையோரப் பிரதேசங்களிலும் உரிமை கோரப்படாத 50 கட்டாக்காலி மாடுகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இவையாவற்றையும் 15 பேர் கொண்ட விசேட பிடிகாரர் மூலம் பிடித்து ஏலம் விடவுள்ளதாகவும் தவிசாளர் சி.சி.மகேந்திரன் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட நவாலி தெற்கு கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் பிரச்சினை குறித்து பொது மக்கள் கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர்.

பெரும்போகக் காலங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் கட்டுப்பாட்டை பெரும்போக அலுவலர் மேற்கொள்வார்.

அதன் பிரகாரம் நவாலியில் உள்ள அனைத்துக் கட்டாக்காலி மாடுகளையும் பிடிப்பதற்கும், ஏலம் விடுவதற்கும் விசேட நடவடிக்கை எடுத்து வருவதாக சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் அறிவித்துள்ளார். (92)

## நாடாளுமன்றம்...

தேர்தல் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி அளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தாவிட்டாலும் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்லவேண்டுமென, அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தினைத் தொடர்ந்து ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்குச் செல்வதாக புதிய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தபோது வாக்குறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 19 ஆவது...

செனிவிரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் 19ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக சில இணக்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

இதன்படி உச்சநீதிமன்றத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள திருத்தங்களை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதானால் அதற்கு ஆதரவளிக்க முடியுமென்று தமது கட்சி அறிவித்ததாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனிவிரத்ன, இதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்ததாகவும் கூறினார்.

அரசியல் யாப்பிற்கு முரணான எந்தவொரு திருத்தங்களும் இந்த விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்படமாட்டாதென்று பிரதமர் உறுதிமொழியொன்றை வழங்கியதாக தெரிவித்த ஜோன் செனிவிரத்ன இதன்படி உச்சநீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட திருத்தங்களுக்கு ஆதரவளிக்க தனது கட்சி தீர்மானித்ததாகவும் கூறினார்.

அதன்படி சம்பந்தப்பட்ட விவாதம் நாளை செவ்வாய் மற்றும் நாளை மறுதினம் புதன் ஆகிய இரு தினங்கள் நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## வெளிநாடுகளில்...

வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தலைவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் குறித்து தற்போதைய அரசிற்கு ஆலோசனை வழங்கவே இந்தக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

இது சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி வரும் அதிகாரிகள், தாம் இதுவரை மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பாக உலக வங்கியின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி, இலங்கைக்குத் தேவை யான உதவிகளைப் பெற்றுக் கொள்ள உள்ளதாகத் தெரிய வருகிறது.

## புகலிடதாரிகள்...

காப்புப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த படகானது 500 கி.மீற்றர்கள் பயணித்துள்ளதாகவும் அதிகளவிலான பயணிகள் பயணித்தமையே குறித்த விபத்திற்கு காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த வருடத்தில் மாத்திரம் 170,000 பேர் வரையில் வறுமையின் நிமித்தமாக ஆபிரிக்காவிலிருந்து புகலிடக்கோரிக்கையாளர்களாக இத்தாலிக்கு பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின்...

இல்லை. ஆனால், அவ்வாறு அத்த கையதொரு நகர்வு முன்னெடுக்கப்பட்டால் கூட, அதற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கவோ, அனுமதிக்கவோ மாட்டார்கள். ஏனென்றால் அவர்களில் பெரும்பாலானவர்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தீவிரவாதத்தை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிப்பதில்லை என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.

அதனால் தமக்கு மோசமான பாதிப்புகள் ஏற்படும் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

சில தரப்புகள் தான், புலிகள் மீள ஒருங்கிணைவதாகக் கூறி, மக்களிடையே பீதியை ஏற்படுத்த முனைகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு...

குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ வெளிநாட்டு வங்கிகளில் எவ்விதமான இரகசியக் கணக்குகளும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சிக்கு கடத்தப்படவிருந்த முதிரை மரக்குற்றிகள் மீட்பு

## 4 பேர் பொலிஸாரால் கைது



ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான 43 முதிரை மரக்குற்றிகளை இரண்டு டிப்பர் வாகனங்களில் சட்ட விரோதமாகக் கொண்டு சென்ற நால்வரை நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து இரண்டு டிப்பர் வாகனங்களை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணதிலக்கவுக்கு நேற்றுக் காலை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்தே இம் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரண்டு டிப்பர் வாகனங்களில் மடுவில் இருந்து கிளிநொச்சிக்கு கொண்டுசெல்லப்படவிருந்த 43 முதிரை மரக்குற்றிகளை பள்ளமடு பகுதியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு டிப்பர் வாகனங்களிலும் முதிரை மரக்குற்றிகள் வைக்கப்பட்டு அதற்கு மேல் கல், மண் என்பன இடப்பட்டு கொண்டு செல்லப்பட்டபோதே பொலிஸார் அவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இதன் போது இரண்டு டிப்பர் வாகனங்களின் சாரதிகள் இருவரையும் அதன் உரிமையாளர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகளும் இரண்டு டிப்பர் வாகனங்களும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

கரவெட்டிப் பகுதியில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சின்னையா யோகராஜா (வயது-49) என்னும் ஏழு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதோடு, இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

– வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு –

# முத்திரை தீர்வை வரி மீளளிக்கப்படவில்லை

கடந்த 4 வருடங்களுக்கும் மேலாக வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை வரி, தண்டப்பணம் என்பன உரிய திணைக்களத்திடமிருந்து மீளளிக்கப்படவில்லை.

இதனால் சபை உறுப்பினர்களின் கோரிக்கைகள், உட்கட்டுமானத் திட்டங்கள் முன்னெடுக்க முடியாதுள்ளது என வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சி.சி.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைக்குரித்தான முத்திரைத்தீர்வை வரி, தண்டப்பணம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சி சபைகள் மேற்படி நிதிகளை உரிய காலங்களில் பெற்று அபிவிருத்தி செய்கின்றன. ஆனால் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

ஏனைய சபைகளுக்கு மேற்படி நிதி கிடைக்க எவ்வாறு திணைக்கள தலைவர்கள் உதவுகின்றனரோ அந்த அடிப்படையில் எமக்கும் உதவ முன்வர வேண்டும்.

மேற்படி நிதி விடுப்பு தொடர்பில் அடுத்தவாரம் யாழ். அரசாங்க அதிபர் நா.வேதநாயகனுடன் பேசவுள்ளதாகவும், நிதிகள் விரைவில் கிடைக்கப்பெற்றவுடன் வலி.மேற்கு உட்கட்டுமான அபிவிருத்தி முன்னிறுத்தப்படும் என தவிசாளர் சி.சி.மகேந்திரன் மேலும் தெரிவித்தார். (92)

## மோசடிகளுடன்...

விரோதமான முறையில் திறைசேரி பத்திரங்களை வழங்கியுள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இதனடிப்படையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அவரிடம் கடந்த வியாழக்கிழமை ஆறு மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலேஷியாவிலுள்ள புலிகளைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை அரசு

## சாடுகிறது திவயின

(கொழும்பு)

படையினரால் தேடப்பட்டு வரும் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள், போதைப்பொருள் வர்த்தகர்கள் உள்ளிட்ட 40 பேர் மலேஷியாவில் பதுங்கி வாழ்கின்றனர்.

எனினும் இவர்களை கைது செய்ய மலேஷியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்று சிங்கள நாளிதழான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர் கடமையில் இருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரி விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்கள் 12 பேரை அந்நாட்டு பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கைது செய்து நாடு கடத்தியிருந்தார்.

இந்த அதிகாரியின் சேவைக் காலம் அண்மையில் நிறைவடைந்திருந்தது. மலேஷிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் புலிச் செயற்பாட்டாளர்கள், போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்வதில் நாட்டம் காட்டுவதில்லை. புலிச் செயற்பாட்டாளர் ஒருவர் தனது கடவுச்சீட்டை புதுப்பிக்க வழங்கியிருந்தார் எனவும் அது குறித்து கூட உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனவும் திவயின் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜனாதிபதி மைத்திரி குறித்தும் விரைவில் புகழ்பாடுவார் விமல்

## என்கிறார் பீல்ட் மார்ஷல் சரத்

(கொழும்பு)

விரைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்தும் விமல் வீரவன்ச புகழ்பாடுவார் என ஜனநாயகக் கட்சி தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்சி செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடும் சந்தர்ப்பத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தன் வயிற்றை குறித்து மாத்திரம் சிந்திக்கும் ஒருவரே விமல் வீரவன்ச என அவர் கூறியுள்ளார்.

விமல் வீரவன்ச தனிப்பட்ட இலாபத்திற்காக எவ்வாறு வேண்டுமென்றாலும் பொய் சொல்லக் கூடியவராவார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு போன்றே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் விரைவில் புகழ்பாடுவார் என்பது புதுமைப்பட வேண்டிய விடயமல்ல என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பலத்த காயங்களுடன் சடலம் மீட்பு

(நெல்லியடி)

நெல்லியடி துன்னாலைப் பகுதியில் வீட்டிலிருந்து வெளியே சென்ற நபரொருவர் நேற்றுக்காலை முகம், கை, கால்களில் பலத்த காயங்களுடன் இறந்த நிலையில் சடல்மாக மீட்கப்பட்டுள்ளார்.

துன்னாலை சக்குசம்பா பகுதியைச் சேர்ந்த இராசையா சிவநாதன் என்பவரே இறந்த நிலையில் மீட்கப்பட்டவராவார். வீட்டிலிருந்து நேற்று முன்தினம் இரவு வெளியே சென்ற பின்னரே இவர் இவ்வாறு உயிரிழந்ததாகவும், இவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (18)

# அமைச்சரவை உபகுழு தெரிவு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம் பெற்ற மற்றும் இடம் பெற்று வரும் அரசியல் பழிவாங்கல்கள் குறித்து கண்டறிவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரையின்படி அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் அரசியல் அழுத்தங்கள் காரணமாக மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மற்றும் பழிவாங்கல்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# 324 முன்னாள் போராளிகள் பல்கலைக்கு அனுமதி

(கொழும்பு)

போருக்குப் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளில் 324 பேர், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளதாக, புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 723 முன்னாள் போராளிகளில், 324 பேர், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

இவர்களில், பெரும்பாலானவர்கள், ஏற்கனவே பட்டப்படிப்பை முடித்து விட்டனர். 4 பேர். மருத்துவர்களாகவும், 2 பேர் பொறியியலாளர்களாகவும் வெளியேறியுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 12,088 விடுதலைப் புலிகள் சரணடைந்ததாகவும், அவர்களில், 46 பேர். மட்டுமே, தற்போது புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில், 3000 பேர் வரை,பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில், பணியாற்றுகின்றனர்.

இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும், ஆடைத் தொழிற்சாலைகளிலும், சுய தொழில்களிலும், ஈடுபட்டுள்ளதாகவும், மேஜர் ஜெனரல் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

# நெல் சந்தைப்படுத்தும் சபையில் பாரியளவில் ஊழல் மோசடி

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் பாரிய ஊழல் மோசடிகள் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சு மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரகாரம், நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகள் குழுவின் ஊடாகவே அடுத்த வாரமளவில் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டிலிருந்து நெல் சந்தைப்படுத்தல் சபையின் கணக்காய்வு அறிக்கைகள் எவையும், கோப் என அழைக்கப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கான நிதியில் எண்ணாயிரத்து 800 மில்லியன் ரூபா பற்றாக்குறையாக உள்ளதெனவும், சபையில் இடம்பெற்றுள்ள மேலும் பல முறைகேடுகள் குறித்து தகவல்களை திரட்டியுள்ளதாகவும் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது ராஜஸ்தான்

(அகமதாபாத்)

சென்னை அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் வட்சன், ரகானே அரைச் சதம் அடிக்க, ராஜஸ்தான் றோயல்ஸ் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சென்னை அணி, இத்தொடரில் முதல் தோல்வியை பெற்றது.

குஜராத்தின் அகமதாபாத்தில் நடந்த லீக் போட்டியில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் மோதின. ராஜஸ்தான் அணிக்கு திரும்பிய வட்சன், மீண்டும் கப்டன் பொறுப்பை ஏற்றார். நாணயச் சுழற்சியில் சென்னை அணி கப்டன் டோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

சென்னை அணிக்கு பிரண்டன் மக்கலம் (12) ஏமாற்றினார். மொறிஸ் பந்தில் ரெய்னா 4 ரன்களில் அவுட்டானார். டுபிளசிஸ் (1) சொதப்பினார். டுவைன் ஸ்மித் 40 ரன்கள் எடுத்தார். இதன் பின் இணைந்த பிராவோ, டோனி சிறப்பாக விளையாடினர். பிராவோ அரைச் சதம் அடித்தார். சென்னை அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 156 ரன்கள் எடுத்தது. டுவைன் பிராவோ (62), டோனி (31) அவுட்டாகாமல் இருந்தனர். பந்துவீச்சில் அன்கிற்சர்மா, மொறிஸ், தம்ரே, போல்க்னர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை இழந்தனர்.

ராஜஸ்தான் அணிக்கு ரகானே, வட்சன் ஜோடி சிறப்பான ஆரம்பம் அளித்தது. பிராவோ பந்தை பவுண்டரிக்கு விரட்டிய வட்சன் அரை சதம் அடித்தார். தன் பங்கிற்கு அசத்திய ரகானேவும் அரைச் சதம் எட்டினார். வட்சன் 73 ரன்களில் ஆட்டமிழந்தார். ஸ்டீவ் ஸ்மித் (6) நிலைக்கவில்லை. ராஜஸ்தான் அணி 18.2 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 157 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரகானே (76), கருண் நாயர் (1) அவுட்டாகாமல் இருந்தனர். பந்துவீச்சில் ஜடேஜா, பிராவோ தலா ஒரு விக்கெட்டுக்களை எடுத்தனர். ஆட்டநாயகனாக ரகானே தெரிவானார்.

# முதலாவது வெற்றியை பதிவு செய்தது மும்பை

(பெங்களூர்)

சிம்மன்ஸ், உன்முகந் சந்த், ரோகித் சர்மா ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ்.

பெங்களூரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹோலி தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 12 ஓட்டங்களுடன் பட்டேலின் விக்கெட்டை இழந்தபோதிலும் அடுத்துவந்த சந்த், சிம்மன்ஸுடன் இணைந்து வேகமான ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டார். எனினும் சிம்மன்ஸ் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த வேளை றோகித் சர்மா களம் புகுந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இதில் சந்த் 58 ஓட்டங்களுடனும், சர்மா 15 பந்துகளில் 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, அடுத்துவந்த வீரர்கள் பெரிதாக சோபிக்காத நிலையில் மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச்சில் வீஸ் 4, சாஹா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய றோயல்ஸ் சலஞ்சர்ஸ் வீரர்களில் வில்லியஸ் (41), ஆட்டமிழக்காமல் வீஸ் (47) அப்துல்லா (20) பிஸ்லா (20) ஆகியோரைத் தவிர ஏனைய அனைவரும் பொறுப்பின்றி ஆடியதனால் அவ்வணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் அதிரடி வீரர் ஹெய்ல் 24 பந்துகளில் 10 ஓட்டங்களையும், அணித்தலைவர் ஹோலி 18 பந்துகளில் 18 ஓட்டங்களையும் தினேஸ் கார்த்திக் 11 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் 3, மலிங்க, பேமா, மக்லினகன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹர்பஜன்சிங் தெரிவானார்.


# மரண அறிவித்தல்



**பொன்னையா இராசேந்திரம்**
**(ராசன்)**

கதிரிப்பாய் மெறெசெலியை பிறப்பிடமாகவும், மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னையா சிவக்கொழுந்தின் அன்பு மகனான பொன்னையா இராசேந்திரம் (ராசன்) 19.04.2015 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் புஸ்பராணி(லீலா)வின் அன்புக் கணவரும், அமரர் ஐயாத்துரையின் மருமகனுமாவார். கஜன் (கிருபன்), அகிலன் (கண்ணன்), எழில்பிரகாஸ்(பிரபா), பிரியங்கா, விஸ்னுக்கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அருந்தினியின் மாமனாரும், பிரவீஸின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 21.04.2015 செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
(இ) குடும்பத்தினர்


இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.